அக்டோபர் - 2025

இதழ் -5

# கேலக்ஸியின் விண்மீன் மின்னிதழ்



## வேலியண்ட் இளையராஜா



## ஜின்னாஹ் ஷரிபுத்தீன் நேர்காணல்

ISBN 978-81-989182-7-7

www.galaxybs.com

GALAXY BOOK SELLERS & PUBLISHERS

விண்மீன்
மின்னிதழ்

கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல
தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே
நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து.
- நாலடியார்

ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான்செயல் அரிது
- ஔவையார்

**பதிப்பாளர்**
பாலாஜி பாஸ்கரன்

**ஆசிரியர்**
பரிவை சே குமார்

**இணை ஆசிரியர்**
தேவதர்சினி நடராஜன்

**வடிவமைப்பு**
சென் பாலன்

**Published by**
Galaxy Book Sellers & Publishers

**Print Partners**
Printech, UAE

**Travel Partner**
FJ Tours & Travels, UAE

**Galaxy Book sellers & Publishers**
www.galaxybs.com
+91 99944 34432

GALAXY BOOK SELLERS & PUBLISHERS

ISBN 978-81-989182-7-7
9 788198 918277

# தமிழ்

தமிழ் அழகான மொழியல்லவா... அதையேன் என் பிள்ளை தமிழ் பேசமாட்டான் என அருவருப்பான மொழிபோல் பேசுகிறோம்..?

பிள்ளைகளுக்குத் தமிழ் பேச, வாசிக்கத் தெரியாது என்று சொல்வதை இன்று பலர் பெருமையாகச் சொல்வதை கேட்கும் போது பெருமைமிகு தமிழ் மொழி இப்போது எதை நோக்கிப் போகிறது என்ற எண்ணம் மனதில் எழுந்து வேதனைப்படுத்தும். மகாகவி பாரதி தனது 'கன்னிப் பருவத்திலே அந்நாள்...' என்ற கவிதையில் 'மெல்லத் தமிழினிச் சாகும்' என்பதை எதற்காகச் சொன்னார் என்பது தெரியாமலேயே பலர், தமிழ் செத்தே போகும் என்று பேசுவதைப் பார்க்கும் போது சிரிக்கத்தான் தோன்றும். அதிலும் தமிழ் செத்தே போகும் எனப் பேசுபவர்களில் பலர் தங்கள் வீட்டில் தமிழ் பேசுவதே இல்லை என்பதையும் நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.

இன்றைக்கு வாசிப்பு என்பது இளைய தலைமுறையிடம் மட்டுமல்ல, பெரியவர்களிடமும் குறைந்துதான் போயிருக்கிறது. இளைய தலைமுறைக்கு தமிழ் வாசிக்கத் தெரியவில்லை என்ற குற்றச்சாட்டை வைத்துவிட்டு, நாம் புத்தக வாசிப்பில் இருந்து மெல்லமெல்ல விடுபட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதுதான் உண்மை. இன்று இணையத்தில் பல குழுமங்கள் வழி வாசிப்புப் போட்டிகள் நடத்தப்படுகின்றன என்றாலும் புத்தகக் கண்காட்சிகளில் புத்தக விற்பனை என்பது வருடா வருடம் குறைந்து கொண்டே வருவதாகத்தான் பதிப்புத்துறையில் இருக்கும் நண்பர்கள் சொல்கிறார்கள். யாரைக் கேட்டாலும் 'செல்போன்ல வாசிச்சிடுறேன்' என்றோ, 'யாருங்க வாசிச்சிக்கிட்டு இருக்கது அதுதான் கதைகளை ஆடியோவாய் இணையம் கொடுத்துடுதே அதைக் கேட்டாப்போச்சு' என்றோ சொல்வதுதான் இப்போது அதிகமாகியிருக்கிறது. என்னதான் இருந்தாலும் புத்தகமாய் வாசிக்கும் போது கிடைக்கும் மனதிருப்தி இவற்றில் சத்தியமாகக் கிடைக்காதுதானே.

தொன்னூறு காலகட்டங்களில் கிராமங்களில் சில வீடுகளில் நிறைய வார, மாத இதழ்கள் வாங்குவார்கள். அந்தப் புத்தகங்கள் எல்லாம் எல்லாருடைய வீட்டுக்கும் சுற்றி வரும். இப்போது கிராமங்கள் ஆட்களே இல்லாத நிலை, அதேபோல் கிராமம், நகரம் என்ற பாகுபாடு இல்லாமல் இதழ்கள் வாங்குவதும் குறைந்துவிட்டது. பெரும்பாலான அச்சு இதழ்கள் இணைய இதழ்களாகிவிட்டன. இப்படி இணைய, மின்னிதழ்கள் அதிகமாய் இருப்பதில் ஒரே ஒரு நன்மை நடந்திருக்கிறது, நடக்கிறது. ஆம்... நிறைய புதிய எழுத்தாளர்கள் எழுதுகிறார்கள். அப்படி எழுதுபவர்களில் பலர் வாசிப்பு இல்லாமல் இருப்பதுதான் வருத்தமே. வாசித்தால் இன்னும் சிறப்பாக எழுத முடியும். எழுத்தாளர்களான நாமே வாசிக்காமல் இருக்கும் போது பிள்ளைகள் வாசிப்பதில்லை என எந்த விதத்தில் குற்றம் சுமத்துகிறோம்..?

பிள்ளைகளை நாம் வாசிக்க வைக்க முடியும் என்பதை எங்களின் கேலக்ஸி கலை இலக்கியக் குழுமம் கண்கூடாகக் கண்டு கொண்டிருக்கிறது. எங்களின் மாதாந்திர 'கதைப்போமா?' நிகழ்வில் பெரியவர்கள் வாசித்ததை பகிர்வதைப் பார்த்து, தாங்களும் பேசுகிறோம் எனத் தானாக குழந்தைகள் முன்வந்தார்கள். ஆரம்பத்தில் ஆங்கிலக் கதைகளோடுதான் வந்தார்கள். அதற்குக் காரணம் இருக்கிறது, இங்கு தமிழ் பயில்வதென்பது அரிதான விஷயம். ஊரில் இருப்பவர்களே என் பிள்ளை ஆங்கிலம்தான் பேசுவான் எனச் சொல்லும் போது வேறொரு நாட்டில் இருக்கும் குழந்தைகள் தாய்மொழியை தனியே கற்றுக்கொள்ள வாய்ப்பிருந்தால் மட்டுமே வாசிக்க முடியும் இல்லையா..?.

சரி விஷயத்துக்கு வருவோம். ஆங்கிலக் கதைகளில் ஆரம்பித்த குழந்தைகள், சில மாதங்களிலேயே தமிழ் கதைகளை வாசித்து பகிர ஆரம்பித்தார்கள். இதில் முக்கியமாகச் சொல்ல வேண்டியது எட்டு வயதுப் பையன் கதை சொல்வதைப் பார்த்து நாலு வயதுக் குழந்தை நானும் சொல்வேன் என மழலை மொழியில் சொல்லியதைத்தான். அதேபோல் இப்போதெல்லாம் எங்களின் நிகழ்வுகளில் குழந்தைகள்தான் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடுகிறார்கள். மேலும் எங்கள் கலை இலக்கியக் குழுமம் மற்றொருமொரு மைல்கல்லாக குழந்தைகள் தமிழ் படிப்பதற்கான முன்னெடுப்பை எடுத்திருக்கிறது. அதற்கான நேரம் விரைவில் வரும், அப்போது இங்குள்ள குழந்தைகள் தமிழ் பேச, எழுத, வாசிக்கச் செய்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

எப்பவுமே நம்ம பிள்ளைகளை நாம் வளர்க்கும் விதத்தில்தான் அவர்கள் பயணிப்பார்கள் என்பதற்கு ஒரு சான்று, வீண்மீன் இதழில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதும் பதினோராம் வகுப்பு மாணவி சௌம்யா இராஜாராம். நிறைய வாசிக்கிறார். இவரின் பெற்றோரும் படிப்பு இருக்கு, புத்தக வாசிப்பைக் குறை என்றெல்லாம் சொல்லாமல் நல்ல நல்ல புத்தகங்களை எல்லாம் வாங்கிக் கொடுத்து வாசிக்கச் சொல்கிறார்கள். அவரின் தீவிர வாசிப்பின் காரணமாக விண்மீனில் தொடர்ந்து புத்தகப்பார்வை எழுதி வருகிறார். இது மகிழ்ச்சியான விசயம்தானே. ஆரம்பத்தில் எழுதியதற்கும் இப்போது எழுதுவதற்கும் அவரின் எழுத்தில் எத்தனை வித்தியாசம் இருக்கிறது என்பதைக் கண்கூடாகப் பார்க்கிறேன். அதுவும் சென்ற இதழில் அவர் கட்டுரையில் பயன்படுத்திய வார்த்தைகள் எல்லாம் அத்தனை சிறப்பு. மகிழ்வும் வாழ்த்துக்களும்.

'என் பிள்ளைக்குத் தமிழ் பேசத் தெரியாது. எப்போதும் செல்போனில்தான் இருப்பான்' என்று செல்லமாய்ச் சொல்வதை விடுத்து தமிழ் வாசிக்கப் பழக்காவிட்டாலும் பேசவாவது சொல்லிக் கொடுப்போம்.

நன்றி.

பரிவை சே குமார்

# இதழில்....

**சிறுகதை**

செதில்கள் - ஜெயந்த்

தைரியம் - கோ.இளங்கோ

மாயநிழல் (நிறைவுப் பகுதி) - அன்பாதவன்

புதிய தொடக்கம் - பாலமுருகன்.லோ

கறி விருந்து - கார்த்திகேயன் மாதயன்

**நேர்காணல்:**

"கண்டிப்பாரற்ற சுதந்திரப் பறவை", காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன் - தேவதர்சினி நடராஜன்.

**கட்டுரை:**

நிஸ்வா என்றொரு பழமையான நகரம்!!! (பகுதி : 3) - இளங்கோ ராமசாமி

வேலியண்ட் இளையராஜா : சிம்ஃபொனி நம்பர்-1 – பாலாஜி பாஸ்கரன்

**புத்தகப் பார்வை** :

மருள் (நாவல்) - சௌம்யா ராஜாராம்

**குறுந்தொடர்:**

அந்த மாலை 4/4 - ஸ்ரீராம்

**ஒரு பக்கக் கதை:**

கைத்தூக்கி பாபாக்கள் - தயாஜி

வைராக்கியம் - மலர்மதி

இன்னொரு சாவி - தயாஜி

**கேலக்ஸி நிகழ்வு:**

'இம்மைத் துறக்கம் எழில் மிகு துபை' - பரிவை சே.குமார்.

**வெண்பா:**

காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

**கவிதை:**

பிரிவின் மடல் - சிறுகவி மு. மாஜிதா

**சினிமா:**

இட்லி கடை - பரிவை சே.குமார்

# செதில்கள்

ஜெயந்த்



தடாகத்தில் முங்கிக் குளித்தெழுந்தவளைக் காட்டின் நள்ளிரவு ரீங்காரங்கள் ஈசல்களைப் போல சூழ்ந்து கொண்டு மொய்க்கத் தொடங்கின. அவள் ஊடல் கொண்டவளைப் போல இருளை நோக்கி சின்னதாய்ச் சிணுங்கினாள். எங்கோ ஒரு கூகையின் ராக்கால மந்திரங்கள் அவளின் ஏகாந்தத்தை சலனப்படுத்தாமல் ஒத்திசைந்து கருமையில் உருகிக் கலந்தன.

சதுப்புக் கரையில் ஒய்யாரமாக அமர்ந்தவள், கரிய திரவத்தில் மிதந்து நெளிந்து கொண்டிருந்த அம்புலியைத் தன் மயங்கிய கண்களினால் பிரியத்தோடு வருடிக் கொண்டிருந்தாள்.

சிறு வயதில் பல பௌர்ணமி இரவுகளின்போது அம்மாவுடன் சேர்ந்து மீன் பிடிக்க நிசோலை இதே தடாகத்திற்கு வந்திருக்கிறாள். குழந்தையின் மிருதுவான சருமத்தை ஒத்த மாசுமருவற்ற சேறு படிந்த குளக்கரை அது. அங்கு நிலவொளியில் இருவரும் கெளுத்தி மீன்களை சுட்டுத் தின்றபடி இருக்க, அம்மா கொடிய ஆண்களின் பாவக் கதைகளை விளம்பிக் கொண்டிருப்பாள். ஆண் வாசனை இந்தத் தீவின் வனாந்தரத்திற்குள் எக்காரணத்தைக் கொண்டும் நுழையவே கூடாது என்பாள்.

பல தலைமுறைகளுக்கு முன்பு இதே தீவின் வெண்ணிறக் கடற்கரையில் ஒரு சிறிய படகு ஒதுங்கியது. பச்சிளம் குழந்தையை ஏந்தியபடி ரூமை என்ற யுவதி தன் பாதங்களை மென்மணலில் பதித்தாள். பரதவ குடும்பத்தைச் சேர்ந்த ரூமை, அவள் கணவனின் மிருகத் தனத்திலிருந்து விடுபட்டு குழந்தையுடன் கடலைத் தாண்டி தப்பி வந்தவள்.

தீவின் பிடாரி ஆண்களை வெறுத்திருந்தாள். ஆணின் கைக்குள் தீவு அகப்படாமல் இருக்கவும், ரூமையின் சந்ததி விருத்தி அடையவும், கன்னிகளாகவே பிரசவிக்கும் வரத்தை அவளுக்கும் அவளின் வழி தோன்றல்களுக்கும் பிடாரி நல்கி இருந்தாள். ரூமையின் காலத்திற்குப் பிறகு அவளுக்கெனத் தீவின் வடக்குக் கரையில் ஒரு கற்கோவில் எழுப்பப் பட்டு, ஒவ்வொரு ஆவணி மாதத்தின் முதல் பௌர்ணமி அன்றும் வனிதைகள் ஆடிப் பாடி மழைப் பருவத்தைக் கொண்டாடினார்கள். அந்நேரங்களில் ரூமை நளின சிற்பமாக உதட்டில் மெல்லிய புன்னகையுடன் அரங்கேற்றங்களை ரசித்திருப்பாள்.

அம்மாவைப் போலவே, குடியின் மற்ற மூதாதையர்களைப் போலவே, நிசோலையும் தனது இருபத்து ஓராம் வயதில் கன்னியாக ஒரு பெண் குழந்தையைப் பிரசவிப்பாள். இந்தக் காட்டின் நியதி அது. இங்கு முளைக்கும் சிறு புற்களும் கூடக் காரிகைகளும், கோதைகளுமே. இது பெண்கள் மட்டுமே சுவாசிக்கும் வனம். இங்கு தாவரங்களின் தண்டுகளில் முளைத்தெழும் கொடிகளுக்கு, ஆண் வியர்வையை நுகர்ந்து முன் கூட்டியே ஆபத்தைக் கண்டறியும் நுண்ணுணர்வு உண்டு.



காளை குளம் என்றறியப் படும் இத்தடாகத்தில் மட்டும் விதிவிலக்காக ஆண் மீன்களே நீந்தித் திரியும். இது குடிகளின் பசி தீர்க்கப் பிடாரி அளித்த தானம் என அம்மா பரவசத்துடன் எத்தனையோ முறை கூறி இருக்கிறாள். நிலவொளியில் பளபளக்கும் கெளுத்திகளின் செதில்கள் கரையோரப் பாறைகளில் சிதறிக்கிடக்க, முட்களைக் காட்டுப் பூனைகளுக்காகப் படைத்துவிட்டு சாறு பொங்கும் பூ போன்ற மென்மையான தசையை செல்விகள் லயித்து உண்பார்கள்.

அந்த நடுநிசியில் தன் பூர்வகுடிகளின் வரலாற்றை மெய்மறந்து வனப்பாடலாக இசைத்துக் கொண்டிருந்த நிசோலை, திடீரென்று தடாகத்தின் மறுகரையிலிருந்த சேற்றுப் பகுதியில் ஒரு காட்சியைக் கவனித்தாள். இளமங்கை ஒருத்தி மயங்கிய நிலையில் சகதியில் குப்புறப் படுத்திருந்தாள். அவள் கூந்தல் முழுக்க மின்மினிப் பூச்சிகள் ஒட்டிக் கிடந்தன. ஆண் மின்மினிகள். இந்த ஆரண்யத்தில் எங்குமே அப்பூச்சிகள் இல்லை. அவள் மலைக்கு மறுபுறத்திலிருந்த ஏதோ ஒரு தீவின் வனாந்திரத்தைச் சேர்ந்தவளாக இருக்கலாம் என யூகித்தாள்.



அந்தக் கன்னிப்பெண் கருவுற்றிருந்ததை அறிந்துகொண்ட நிசோலையின் மனதில் ஒரு இனம் புரியாத பயமும் கூடவே சின்ன நாணமும் துளிர் விட்டன. மூன்று மாதக் கரு என மூதாட்டி மரமான ஆலம் தன் விழுதால் நுகர்ந்து நடுக்கத்துடன் கூறினாள். கிழட்டு ஆலத்தின் சிந்தனையிலும் அவளை சுற்றி இருந்த மற்ற தாவரங்களிலும் விளங்கிக்கொள்ள முடியாத ஏதோ ஒரு பீதி பற்றியிருந்தது. அது என்ன உணர்வு என்பது அவர்களுக்குப் புலப்படவில்லை.

காட்டுச் செம்பருத்தியின் சாறை மயங்கிக் கிடந்தவளின் உதட்டில் நிசோலை நனைத்தாள். சில நிமிடங்களில் அவள் நினைவு திரும்பியதுமே தன் பெயர் அமரந்தா என்றாள். தன்னைப் பற்றிய விசாரணைகளுக்கு மௌனமும் விம்மல்களுமே அவளிடமிருந்து வெளிப்பட்டதால் இனி ஏதும் கேட்கப்போவதில்லை என நிசோலை ஆறுதலாகக் கூறினாள். இரவின் மூன்றாம் ஜாமம் முடியும் வேளையில் உள்காட்டில் அமைந்திருந்த தன் குடிசைக்குப் புதியவளை அழைத்துச் சென்றாள்.

அம்மாவின் மரணத்திற்குப் பிறகு காட்டின் ஒரே இளவரசியைப் போலத் தனிமையில் நாட்களை நகர்த்தி வந்தவளுக்கு அமரந்தா ஒரு அன்புத் தமக்கையைப் போலத் தோன்றினாள். அடுத்த சில வாரங்கள் இருவரும் ஒரே தாய் வயிற்றில் உதயமான சகோதரிகளைப் போல மகிழ்ந்து விளையாடித் தீவு முழுக்க சுற்றித் திரிந்தார்கள்.

மாதங்கள் நகர்ந்தன. அமரந்தாவின் குணத்திலும் குரலிலும் மர்மமான மூர்க்கம் குடியேறி இருந்ததை நிசோலையால் உணரமுடிந்தது. அமரந்தாவினுள் கருணையின் ஈரத் தடயங்கள் வற்றிக் கொண்டே வந்தன. அல்லது முன்பு இருந்ததாகத் தென்பட்ட ஈரம் வெறும் கானல் நீரா எனும் குழப்பம் நிசோலையை வாட்டி வதைத்தது. முற்றிலும் புதியவளாகத் தோன்றினாள் அமரந்தா. மரக் கிளைகளில் கூடு கட்டி வாழ்ந்திருந்த பறவைகளையும் அவைகளின் முட்டைகளையும் வேட்டையாடத் தொடங்கினாள். புள்ளி மான்களையும் முயல்களையும் பதுங்கிக் கொன்றாள். காளை குளத்து மீன்களைத் தொட மறுத்தாள். காடே அவளைக் கண்டு அஞ்சியது. நிசோலை அவளைக் கட்டுப்படுத்த முடியாமல் திக்குமுக்காடினாள். குழந்தை பிறந்தால் அவளின் வேட்கை மறையலாம் என ஆலம் மூதாட்டி ஆறுதல் உரைத்தாள்.

அமரந்தா ஏழாம் மாதத்திலேயே பிரசவிக்கத் தயாரானது அவளைச் சுற்றி இருந்த புதிர் தன்மையைப் பன்மடங்கு கூட்டியது. அன்று அமாவாசை. இது வரை அத்தீவில் கேட்டிராத நரிகளின் ஏளனச் சிரிப்பொலிகள், பயம் அறியாத கருவேங்கையின் உடலிலும் ரோமாஞ்சனத்தை எழுப்பின. இரண்டாம் ஜாமத்தின் உக்கிரப் பொழுதுகளில் கர்ப்பிணியின் உடல் குழந்தையை வெளியே உதறியது.

நிசோலை அதிர்ச்சியில் உறைந்தாள். அது ஆண் குழந்தை. கொழகொழப்பாக மினுங்கிய முகத்தின் தாடைப் பகுதியில் ரோமங்கள் நெளிந்தன. குடிசையின் களி மண் தரையைத் தொட்ட மூன்றாம் நிமிடம் குழந்தை இரண்டு கால்களில் எழுந்து நின்று, ஊனுண்ணிப் பற்கள் பளபளக்க வெறி கொண்டு ஒரு சைத்தானைப் போல சிரித்தான். அசுரப் பசி அவன் வயிற்றைக் கிள்ள, குடிசையை விட்டு அதிவேகமாகத் தாவி வெளியேறி பறவைக் கூடுகளைத் தேடி மரங்களில் ஏறத் தொடங்கினான்.

நிசோலை பயத்தில் சில்லிட்ட தன் தேகத்தைத் திருப்பி அமரந்தா படுத்துக் கிடந்த நார்ப் பாயைப் பார்த்தாள். அங்கு அவள் இல்லை. ஏழடி உயர ஆண் ஒருவன் நிர்வாண கோலத்தில் உருமிக் கொண்டு நின்றிருந்தான். ஒரு பெண்ணின் கூந்தலுடன் கூடிய முழு உடலின் தோல் பகுதி, உதறி விடப்பட்ட பாம்புச் சட்டையைப் போல குடிசையின் ஒரு மூலையில் நிர்க்கதியாகக் கிடந்தது. அதன் மேல் ஈசல்கள் சூழ்ந்து ஒப்பாரிப் பாடல்களைப் பாடி மொய்த்துக் கொண்டிருக்க, தீவின் வடக்குக் கரையில் கோவில் கொண்டிருந்த ரூமை கனத்த மௌனத்துடன் தன் முகத்தைக் கார்கடலின் பக்கம் திருப்பிக் கொண்டாள்.

# “நான் கண்டிப்பாரற்ற சுதந்திரப் பறவை”

## - காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன்



தேவதர்ஷினி நடராஜன்



**‘காப்பியக்கோ’ ஜின்னாஹ் ஷரிபுத்தீன்** - இந்தப் பெயரை இலங்கை மட்டுமே சொந்தம் கொண்டாடாமல் உலகமெங்கும் இருக்கும் தமிழர்கள் அனைவரும் கொண்டாடும் பெயராக ஆக்கிக் கொண்டதில் அவரது குணத்திற்கும் , அவர் எழுதிய தமிழுக்கும் பெரும் பங்கு உண்டு. ‘பா’க்களால் பார் புகழும் மனிதராகி மதம் கடந்து பல்வேறு காப்பியங்கள் எழுதியிருக்கிறார். எழுத்துலகில் அதுவும் இலக்கண இலக்கியத்தில் அவர் பரந்து விரிந்த வானம். , நாம் அந்த வானத்தை அண்ணாந்து பார்த்து ரசிப்பதோடு, அவரைப் போல் நாமும் உயர, அவரைப் போல் வாசிக்க வேண்டும், எழுத வேண்டும், உழைக்க வேண்டும். அப்படி ஒருவேளை ஐயாவைப் போல் தொடர்ந்து இயங்கினால் நாமும் ஒரு நாள் வானமாகலாம் ஆனால் அப்போதும் ஐயா அதற்கும் மேலான ஒன்றாகத்தானிருப்பார்.
கேலக்ஸி பதிப்பகத்தின் முதல் புத்தகம் ஐயாவின் ‘மைவண்ணம் ராமகாவியம்’, இந்த மூன்றாண்டுகளில் கேலக்ஸியின் வளர்ச்சி என்பது ஐயாவின் எழுத்தைப் போல் வீரியமாகப் பயணிக்கிறது. இந்த மாதத்தின் முதல் வாரத்தில் ஐயாவின் நூலான ‘ இம்மைத் துறக்கம் எழில்மிகு துபை’ என்னும் காப்பியத்தை தனது 70-வது நூலாக கேலக்ஸி வெளியிட்டு மகிழ்ந்தது. அந்தப் புத்தக வெளியீட்டுக்குப் பின் ஐயா அவர்கள் நமது இதழுக்குக் கொடுத்த சிறப்பு நேர்காணல். இது சிறப்பான நேர்காணல் என்பதில் எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை.

**பள்ளிச் சிறுவனாக இருந்த போது, எதிர்காலத்தில் என்ன ஆக வேண்டும் என்று விரும்பினீர்கள்?**
சிறு வயதில் மருத்துவனாக வேடமிட்டு மற்றவர்களை பரீட்சித்து சிவப்பு ”க்ரேப்” தாள்களைத் தண்ணீரில் கரைத்து மருந்தாகவும், குன்றி மணிகளை வில்லைகளாகவும் பாவித்து மருந்து கொடுப்பேனாம் அதுவே நிஜமாகிப் போயிற்று. இப்போது எனதுவாரிசாக எனது பேரன் மருத்துவம் படிக்கின்றார்.

**உங்கள் பெற்றோர் ,உடன் பிறந்தவர்கள் பற்றி சொல்லுங்கள்.**
புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன் எனது தந்தையார் ஆசிரியராக நீண்டகாலம் பணியாற்றி பின்னர்பாடசாலைக் கல்வியதிகாரியாக ஓய்வு பெற்றார். புகழ்பெற்ற புலவர் பன்னூலாசிரியர். தாயார் குடும்பப்பெண் எங்கள் குடும்பம் பெரிது.நான்கு சகோதரர்கள். ஒன்பது சகோதரிகள்

**நீங்க அப்பா செல்லமா? அம்மா செல்லமா? யார் அதிகமாக கண்டிப்பார்கள்?**
நான் கண்டிப்பாரற்ற சுதந்திரப் பறவை. யாருக்கும் செல்லம் கிடையாது. சுருங்கச் சொன்னால். ஒரு ”அடங்காப் பிடாரி”.

**மருத்துவராக முதல் பணி எங்கே? எப்போது?**
படிப்பும் பயிற்சியும் முடிந்ததும், தலைநகரை அண்டிய புறநகர் பகுதியில். தனித்துவமாக.

**மலைக்கிராம மனிதர்களுக்கு செய்த மருத்துவ சேவை தந்த மனநிறைவு என்ன? எதும் மறக்க முடியாத அனுபவங்கள் உண்டா?**

மலைக்கிராமமல்ல. மலையும் உள்ள கிராமம். ஆசிரியத் தொழிலும், மருத்துவத் தொழிலும் முழுமையான மனநிறைவைத் தரும் தொழில்கள். நான் என் தொழிலில் முழு மனநிறைவு பெற்றபின்னர்தான் இருதய சத்திர சிகிச்சையின்பின் அதிலிருந்து ஓய்வு பெற்றேன். என் கரங்களால் பிரசவங் கண்டவர்கள் பலர். சிறப்பான வாழ்வதைக் கண்டுள்ளேன். உவமைக்கொன்று. ஒருவர் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர். மறக்கமுடியாத ஆனுபவங்கள் எண்ணிலடங்கா. நினைக்கும்போது அவையே எனக்கு ஆத்ம திருப்தியை இன்றுந் தருகின்றன.

**மருத்துவர் ஜின்னாஹ், எழுத்தாளராக காப்பியக்கோவாக மாறியது எவ்வாறு?**

தந்தை புலவர்மணியிடம் இருந்தே தமிழ் கற்றேன் இளமையிலிருந்தே தந்தையின் வற்புறுத்தலால் இடைக்காலப் புலவர்களின் கவிதைகளை அக்காவோடும், அண்ணனோடும் மனனம் செய்ததோடு, எனது சிறிய தந்தையிடமிருந்து இராமாயணத்தின் இரண்டு காண்டங்களில் பரிட்சயமானேன். இளமைக்காலத்தில் பள்ளிப் படிப்போடு வாசிப்பும் கைவந்தது. கல்கியும், அகிலனும், சாண்டில்யனும், பார்த்தசாரதியும், மு.வ. வும் எனக்குத் தமிழ்ப்பாலூட்டினர். அதற்கு முன்னர் பி.எஸ்.ஆர், தமிழ்வாணன், சிரஞ்சீவி போன்றோரின் துப்பறியும் நாவல்கள். ஆரம்பப் படிகள்.

பின்னர் உள்ளுறைந்துகிடந்த தமிழுணர்வு கவிதையில் காலூன்ற வைத்தது. தந்தையார் தந்த ஊக்கமும், பத்திரிகை ஆசான் ஐயா. எஸ்.டி.சிவநாயகம் அவர்களின் அரவணைப்பும் என்னை கவிஞனாக சமைத்தெடுத்தன. அதன்பின் எனது வழிகாட்டியான ஐயா எஸ்.டி.சிவநாயகம் போன்ற பலரது தூண்டுதல்கள், சிறப்பாய் இந்திய அறிஞர்கள் தந்த உற்சாகங்கள் என்னை காவியங்கள் பாடவைத்தன. காப்பியக்கோவாக்கியதும். அந்தப் பட்டம் வழங்கியதும். உங்களவர்கள்தாம்.

**35 நூல்கள் 16 காவியங்கள் படைத்த நீங்கள் இன்றைய எழுத்தாளர்களுக்கு சொல்லும் சேதி என்ன?**

தமிழைத் தலைதாங்க இன்றைய படைப்பாளிகள் அனைவரும் நிறையவே நூல்களைத் தேர்ந்து வாசிக்க வேண்டும். கவிஞராக வரவிரும்புபவர்கள் கவிதை யாப்பினை ஓரளவேனும் கற்று பரிட்சயமாக வேண்டும். மொழி வாலாயமின்றி படைப்பிலக்கியம் செய்யமுயல்வது.”கல்லில் நாருரிப்பதொக்கும். கல்லாதான் கவிசெய்வதும் அவ்வாறேதான்.





**வாசிப்பு என்பது எழுத்தாளர்க்கு எந்த அளவுக்கு முக்கியம்? முக்கியமா?**

வாசிப்பே ஒருவரை முழுமனிதனாக்குகின்றது. இது எல்லோருக்கும் பொருந்தும். என்னை உருவாக்கியது எனது வாசிப்புத்தான்.

**எழுதுவதற்கு என்ன பயிற்சி செய்யலாம்?**

தமிழறிஞரிடம் ஆக்கங்களைத் தந்து திருத்தம் பெற வேண்டும். மீண்டும்மீண்டும் ஓய்வில்லாமல் படைப்பில் கவனம் செலுத்த வேண்டும்.

**சமுதாயத்தில் எழுத்தாளரின் பங்கு என்ன?**

சமுதாயத்தை வழிநடத்துவதில் எழுத்தாளனின் பங்கு அளப்பரியது. உவமைக்குச் சொல்வாதாயின். வள்ளுவனின் குறளே இன்றும் மக்களை வழிநடாத்துவதில் பங்களிப்பதை நாமறிவோம்.

**உங்கள் குடும்பம் பற்றி கூறுங்கள்.**

மனைவி, ஆண் மக்கள் மூவர். பெண்மகள் ஒருவர். பேரர்கள் பதின்மூன்று.

**தற்போது ஏதேனும் படைப்பு எழுதிக்கொண்டிருக்கிறீர்களா?**

ஆயிரம் குறட்பாக்கள் எழுதிக் கொண்டுள்ளேன்.

**அடுத்து வரும் காலங்களில், எப்படியானவராக நினைவு கூரப்பட விரும்புகிறீர்கள்..?**

ஒரு நல்ல மனிதனாக

# காப்பியக்கோவின் வெண்பா



ஓரக்கண் தன்னாலிவ் வொண்டொடி நோக்கலென்னே
காரணந்தான் யாரறிவார் கூறுவரோ – தீராத
வேட்கைக்குட் பட்டனளோ வேறேதுங் காரணமோ
நாட்டத்தைச் சொல்லின் நலம்

- காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

# மருள் (நாவல்)



சௌம்யா ராஜாராம்
பாரதி நகர், முகவை

மருள்...

இந்தப் பெயரைக் கேட்டவுடன் பலரது மனதில், மருள் என்றால் என்ன..? இது என்னவாக இருக்கும்..? இதனுடைய அர்த்தம் என்ன..? என்ற பல கேள்விகள் எழலாம். இப்படி மனதுக்குள் எழும் பல்வேறு கேள்விகளுக்கு விடையாக இந்நூல் அமைந்துள்ளது எனலாம்.

பொதுவாக கிராமம் என்றாலே முதல் நினைவிற்கு வருபவை பசுமையான சூழல், அன்பான மக்கள், குறிப்பாக தெய்வ வழிபாடு. மருள் பற்றிப் பேச ஆரம்பித்து எதற்காக கிராமத்துக்குள் போயிருக்கிறேன் என்ற எண்ணம் தோன்றலாம்.

ஆம்... நான் இப்படி ஆரம்பிப்பதற்கும் காரணம் இருக்கிறது. அது என்னவெனில் இக்கதையின் களமே கிராமம்தான். ஒரு மனிதனின் கிராமத்து வாழ்க்கை எவ்வாறு அமைகிறது..? அதுவும் அந்த மனிதன் ஒரு சாமியாடியாக இருந்தால் அவனது வாழ்வு எப்படியிருக்கும்..? என்பதுதான் இக்கதையின் சாராம்சம்.

கதையின் முக்கிய கதாபாத்திரமான வீராயி, பூங்குளம் கிராமத்தின் சாமியாடியாகத் திகழ்கிறார். அதுவும் வழிவழியாக தெய்வத்தால் தேர்ந்தெடுக்கப்படும் சாமியாடி வரிசையில் அவளும் ஒருத்தி. அவள் சொன்னது நடக்கும்.

'சாமியாடியா..! சாமியாடி வீடுன்னா ஊர் உலகம் தப்பாப் பேசுமே, உருப்படாதே என நினைக்கும் அப்பா, வீராயியைக் கடவுளாக நினைத்து அவள் சொல்வதுதான் வேதவாக்கு என்று நினைக்கும் ஊர்மக்கள். எதிர்காலத்தில் நடப்பதையெல்லாம் முன்கூட்டியே அறிந்து கொள்ளும் சக்தி அவளிடம் இருப்பதால் ஊரில் நடக்க இருக்கும் ஒரு முக்கியமான நிகழ்வு பற்றி முன்கூட்டியே தெரிந்திருந்தும் வெளியே சொல்ல முடியாமல் தவிக்கும் வீராயி எனக் கதை நகர்கிறது

இவற்றிற்கு இடையே அந்தக் கிராமத்தில் நடக்கும் சம்பவங்கள், பிறகு அங்கிருக்கும் தெய்வங்கள் உருவான கதை என நாவல் பரபரப்பாக நகர்கிறது. ஒரு சாமியாடியோட வாழ்க்கை எப்படி இருக்கும் என்பதையும், அவர் அனுபவிக்கும் இன்பம், துன்பங்களையும் மிகத் தெளிவாகவும் அழகாகவும் எடுத்தியம்புகிறார் எழுத்தாசிரியர் பரிவை சே.குமார் அவர்கள்.




இவருடைய எழுத்துக்கள் எல்லாமே மண் சார்ந்து இருப்பதால் எளிய மக்களுக்கு எளிதாகப் புரியும்படி இருப்பதுடன், பழமையான கிராமத்து வாழ்க்கையைப் பற்றி அறிந்து கொள்ளும்படியாகவும் இருக்கிறது. மழை பெய்தவுடன் முதலில் வரும் மண்வாசனையைப் போல் கிராமம் என்றாலே முதலில் நினைவுக்கு வரும் எழுத்தாளர் பரிவை சே.குமார் எனலாம்.

இவருடைய அனைத்து நூல்களும் மண்சார்ந்து எழுதப்பட்டவை. எதிர்சேவை, வேரும் விழுதுகளும் என்ற இவரின் புத்தக வரிசையில் ஒன்பதாவது நூலான மருளுக்கு வாழ்த்துகளும் பாராட்டுக்களும். அதுமட்டுமின்றி எங்கள் அறிவுச் சிந்தனைகளுக்கு விருந்தளித்தமைக்கு நன்றிகளும்.

நான் வாசித்த பல்வேறு புத்தகங்களில் என்னளவில் சிறந்ததாக நான் கருதும் நூல் 'மருள்'. இந்நூலை அனைவருக்கும் பரிந்துரைப்பதில் மனதளவில் மகிழ்ச்சி அடைகிறேன்.

நன்றி.

# தைரியம்



கோ.இளங்கோ, மதுரை

அரசு அலுவலரான எனக்கு போன மாதம் பணி மாறுதல். அதுவும் இந்த கிராமத்திற்கு. ஒரு வருடத்துக்குள் திரும்ப பழைய அலுவலகத்திற்கே போய்விடலாம். அதுவரை இங்கே காலத்தை ஓட்டியாக வேண்டும். நகரவாசியான எனக்கு கிராமம் புதிது.

ஆனால் நான் தங்கியிருந்த கிராமத்தில் எல்லா வசதிகளும் இருந்தது. முக்கிய சாலைகள் இரண்டு, மூன்று மட்டும் இருந்தாலும் அந்த சாலைகளிலேயே பணம் எடுக்கும் வசதி, பெட்ரோல் நிரப்புமிடம், சின்ன மருந்துக்கடை போன்ற அத்தியாவசிய கடைகளும், நகரத்தில் இருப்பதைப் போலவே விளம்பர பதாகைகள், நிறைய இருசக்கர வாகனங்கள், விதவிதமான கோழி இறைச்சி வகைகளுடன் உணவகங்கள், இன்னும் பிற அனாவசியமான கடைகளும் இருந்தன. நகரத்தின் சாயல்,அந்த சாலைகளில் தெரிந்தது.

விவசாய நிலங்களும், ஆறுகளும் அதிலிருந்து பிரியும் வாய்க்கால்களும், கண்மாயும், எங்கும் நிறைந்து இருந்த பெரிய சிறிய மரங்களும், பறவைகளும் மட்டும் தான் இது கிராமம் என அடையாளப்படுத்தியது.

நான் தங்கியிருந்த வாடகை வீடு, ஐந்தாறு மரங்களுக்கு நடுவே நிறைய வெளி இடத்துடன் இருந்தது. வீடு சிறியது என்ற உணர்வே வரவில்லை. தூங்குவது, சாப்பிடுவதை தவிர எல்லாம் வெளி புழக்கம் தான்.

வீட்டை விட்டு வெளியில் வந்தால் சற்று தூரத்தில் ஆறும், அதிலிருந்து பிரிந்து வரும் நீண்ட வாய்க்கால் ஒரு இடத்தில் சரெலென்று திரும்பி செல்லும். அதன் அருகிலேயே பெரிய புளிய மரம் ஒன்றும், புங்கை மரம் ஒன்றும் இருக்கும். நிறைய புற்கள் நிறைந்த மிக அழகான இடம் அது.

தினமும் மாலை அலுவலக நேரம் முடிந்தவுடன் அங்கு போய் உட்கார்ந்து கொள்வேன். அந்த நீண்ட கால்வாயின் மற்ற எல்லா இடங்களிலும், மக்கள் நடமாட்டம் மிக அதிகமாக இருக்கும். ஏனோ தெரியவில்லை இங்கு மட்டும் யாரும் வருவதேயில்லை.

அந்த அமைதி, தனிமை விரும்பியாகிய எனக்கு ஒரு வரமாகவே தெரிந்து. இருட்டும் வரை உட்கார்ந்து, உறவினர்கள், நண்பர்கள் என அனைவரிடமும் தொலைபேசியில் காற்றாட பேசிவிட்டு தான் வீட்டுக்கு வருவேன்.

நகரத்தில் வீட்டு குளியலறையில் கதவை பூட்டி, வாளிகளில் தண்ணீர் பிடித்து வைத்து விட்டு, அந்த அளவுக்குள் குளித்து பழக்கப்பட்ட எனக்கு ஆரம்பத்தில், அந்த வாய்க்காலில் குளிக்க அவ்வளவாக மனம் வரவில்லை. தண்ணீர் உடம்புக்கு சேருமோ, சேராதோ என்ற பயம் வேறு.

ஒரு தடவை என் மனைவியிடம் வாய்க்காலில் குளிக்கவா? என்று கேட்டதற்கு "சனி ஞாயிறு வீட்டுக்கு வரும் பொழுது தலைவலி ஜலதோஷம் என்று எதையும் கொண்டு வந்துடாதீங்க!! இந்த வாரம் என் தங்கை வீட்டு விசேசத்திற்கு வேறு போகனும். தினமும் அடுப்பில் சூடு தண்ணீர் வைத்தே குளியுங்கள்" என்றார் சற்று சலிப்பான, எச்சரிக்கும் குரலில்.

இரண்டு நாட்களுக்கு முன், மரத்தடியில் அமர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தவன், சரி குளித்து பார்க்கலாமே என்ற ஆசை வர, மிக எச்சரிக்கையாக படிக்கட்டில் இறங்கி குளிக்க ஆரம்பித்தேன். ஆழம் இல்லை. ஷட்டர் வைத்து அடைத்து விட்டதால் வேகமும் இல்லை. இடுப்பு வரைதான் தண்ணீர். ஓடும் நீரில் கொஞ்சம் கொஞ்சமாக இறங்கி, தலை மூழ்கி, மூழ்கி குளித்தது ஆனந்தமாக இருந்தது.

குளித்து விட்டு, வீட்டுக்கு வரும் வழியில், ஊரில் இருந்த சிறுசு, பெருசு எல்லாம் என்னை புதிதாய், ஏதோ வித்தியாசமாக பார்ப்பதுபோல் இருந்தது. ஏதோ அமானுஷ்ய சக்தியை பார்ப்பது போல், கண்களில் ஒரு வித மிரட்சியுடன் பார்த்தார்கள். எனக்கு ஒன்றும் புரியவில்லை.

இரண்டு நாட்கள் ஆகியும், நான் பயந்தது போல ஜலதோஷம், தலைவலி என்று ஒன்றும் செய்ய வில்லை. எனவே இன்றும் அதே ஆற்றில், அதே இடத்தில் குளிக்க வேண்டும் போல் இருந்தது. மாலை அலுவலகம் முடிந்து வந்தவுடன் துண்டு, சோப்பை எடுத்துக் கொண்டு வாய்க்காலை நோக்கி நடக்க ஆரம்பித்தேன்.

போகும் வழி எல்லாம் ஊர்க்காரர்கள் எல்லாம் என்னை இன்னும் ஆச்சரியமாக, வித்தியாசமாக பார்த்தார்கள். எனக்கு ஒன்றும் புரியவில்லை. வந்து சில நாட்களே ஆனதால், யாரிடமும் காரணம் கேட்பதற்குதற்கு தயக்கமாக இருந்தது.

அலுவலகத்தில் பணிபுரியும் உள்ளூர் நண்பர் வினோத்தின் வீட்டிற்கு சென்று இது பற்றி பேசலாம் என்று நினைத்தவன், வேண்டாம் நாளை நேரில் பேசலாம் என முடிவெடுத்தேன்.

மறுநாள் அலுவலகம் செல்லும் வழியில், அதே நிலைதான். எல்லோரும் பார்த்தார்கள். அவர்களுக்குள் குசுகுசுவென பேசிக்கொண்டார்கள். ஒரே குழப்பமாக இருந்தது எனக்கு. முதலில் வினோத்திடம் சென்று இது பற்றி பேசி, ஒரு முடிவு காண வேண்டும் என்றெண்ணிய படி விரைந்து அலுவலகம் நோக்கி நடந்தேன்.



அலுவலக வாசலிலேயே உள்ளூர் நண்பர் வினோத், என்னை எதிர்பார்த்திருந்தைப்போலவே நின்று கொண்டிருந்தார். நான் பேசுவதற்கு முன்பே அவர், ”கையை கொடுங்கள் சார்! ஊரில் எல்லாம் உங்களைப் பற்றி, உங்கள் தைரியத்தை பற்றித்தான் பேச்சு.” என்றார். “வினோத், என்னக்கு ஒன்றும் புரியல” என்று ஆரம்பித்தவனை மடக்கிய வினோத்” பின்ன என்ன சார்! நீங்க குளிக்கிற இடத்தில் போன வருடம் ஒரு சின்ன பொம்பள பிள்ளை குளிக்கும் போது, வலிப்பு வந்து காப்பாற்ற ஆள் இல்லாமல் செத்தே போயிருச்சு. பிணம் அங்கிருக்கும் ஷட்டரில் மாட்டி, மறுநாள் தான் எடுத்தார்கள்.

அன்றிலிருந்து அந்த புளியமரத்து பக்கத்தில், சிரிப்பு சத்தம் கேட்குது, அழுகை சத்தம் கேட்குதுன்னு யாரும் அந்த பக்கமே போறதில்லை. அதையும் மீறி குளிக்க போன ஒரு பிள்ளைக்கு பேய் பிடிச்சிருச்சுனு ஊரெல்லாம் ஒரே பேச்சு. இது நடந்தது உங்க வீட்டுக்கு பக்கத்துல. இது பற்றி நீங்க நிச்சயம் கேள்விப்பட்டு இருப்பீங்க. ஆனா, நீங்க என்னடானா!! வந்த ஒரு மாதத்திலேயே தினமும் இருட்டும் வரை அங்கேயே இருந்தது மட்டுமில்லாம, இப்ப அங்கயே குளிச்சு உங்க தைரியத்தை நிரூபிச்சு, ஊர் பயத்தையும் போக்கிட்டீங்க சார்! போங்கிட்டீங்க!! என்ன தான் இருந்தாலும், படித்தவர் படித்தவர்தான் சார்” என்று அவர் பாராட்டி பேச பேச, இது பற்றி எதுவும் தெரியாத எனக்கு மேற்கொண்டு அவர் பேசியது எதுவும் காதில் விழவில்லை. எனக்கு காய்ச்சல் வருவது போலிருந்தது. எப்படியே சமாளித்து இருக்கையில் போய் பட்டென்று அமர்ந்தேன்.

அடுத்த இரண்டொரு நாட்களில் ஒருவர் பின் ஒருவராக நிறைய பேர் அந்த இடத்தில் குளிக்க ஆரம்பித்தார்கள். பெண்கள் துவைத்தார்கள். பேசினார்கள். சிரித்தார்கள். எனக்குத்தான் ஏனோ, அதன் பின் அங்கு செல்ல தைரியம் வரவில்லை.



# கைத்தூக்கி பாபாக்கள்





தயாஜி, மலேசியா



இன்றோடு பல ஆண்டுகள் கழிந்துவிட்டன. இன்னமும் அவருடைய புகழ் மங்கவில்லை. மாறாக உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் அவரைக் காண வருகிறார்கள். அவரின் கதையைக் கேட்டு பார்க்க வந்தவர்களில் பல பேர், அவரது பக்தர்களாக திரும்புகிறார்கள்.

அவ்வளவு எதற்கு, கைப்பேசியே இல்லாத அவருக்கு முகநூலில் இருபதற்கும் மேலாக பக்கங்கள், ஆறு டுவிட்டர் அக்கவுண்ட்கள், இரண்டு இணையத்தளங்கள் என உள்ளன. தினமும் அதில் அப்டேட்கள் வந்தவண்ணமே இருக்கின்றன. சில மூலிகையைப் பொருட்களையும் நீங்கள் அங்கு வாங்கலாம். உலகில் எந்த மூலையில் நீங்கள் இருந்தாலும் உங்களால் இலகுவாகப் பணம் கட்டி 'சில பல' மாதங்கள் காத்திருந்து அவர் ஆசிர்வதித்த ருத்ராட்சங்களை பெற்றுக்கொள்ளலாம்.

அவருடன் எடுத்துக்கொண்ட செல்ஃபிகள் பலரின் முகப்பு புகைப்படங்களாக இருக்கின்றன. பல கோவில்களில் அவருடைய திருஉருவம் லெமினேட் செய்து விற்கப்படுகின்றன. அதை வாங்க மட்டுமே அந்தக் கோவிலுக்கு செல்கின்றவர்களும் உண்டு.

இதுவெல்லாம் எப்போது ஆரம்பமானது? எந்தவொரு இயக்கமும் சாராமல் தனியொரு மனிதன் மீது மக்களுக்கு இவ்வளவு பக்தி வருவதற்கு என்ன காரணம் என நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஒருநாள் உலக அமைதிக்காக ஒற்றைக் குரலொன்று ஓங்காரமாய் ஒலித்தது. யாருமே அதனைப் பொருட்படுத்தவில்லை. இவனெல்லாம் சொல்லியா உலகம் கேட்டுவிட போகிறது என்கிற நக்கல்களுக்கு பஞ்சமில்லை. ஒரு நாள் கடந்து ஒரு வாரமாகியது. யாருமே கண்டுகொள்ளவில்லை. அந்த மனிதர் அமர்ந்திருந்த கோவில் வாசலில் அவரையும் ஒரு பிச்சைக்காரன் போலவே கடந்து சென்றார்கள் பக்தர்கள்.
அப்போதுதான் அந்த அசரீரி ஒலித்தது. என்ன நினைத்தாரோ தெரியவில்லை. கொஞ்ச நேரம் கண்களை மூடியவர்; சட்டென கத்தினார். "உலக அமைதிக்காக ... இந்த உலகின் அமைதியை வேண்டி... உலகில் எல்லோரும் நிம்மதியாய் இருக்க... என் பிரார்த்தனையை முன் வைத்து என்னுடைய வலது கையை மேலே தூக்குகிறேன்... என் வேண்டுதல் பலிக்காமல் ஒருபோதும் இந்த வலது கரம் பூமியைப் பார்க்காது....". கத்தி முடிக்கவும் சம்பந்தமே இல்லாமல் அங்கொரு மின்னலும் தோன்றி பலரையும் ஈர்த்தது.

அன்று தொடங்கியது அவரது தவம். சில நாட்களிலேயே அவருக்கென ஒரு கூட்டம் கூடியது. உண்மையாகவே கையை மேலேதான் வைத்திருக்கிறாரா என்கிற ஆராய்ச்சியில் பலரும் தோல்வி கண்டனர். அவரை எப்படி அழைப்பது என எல்லோருக்குமே குழப்பம். ஒருசேர அவரை 'கைத்தூக்கி பாபா' என்று அழைத்து மகிழ்ந்தார்கள் பக்தர்கள்.

எல்லாவற்றையும் கடவுள் பார்த்துக்கொண்டுதானே இருக்கின்றார். அதுவும் தன் கோவில் வாசலில் அமர்ந்திருக்கும் ஒருவன் தன்னைவிட அதிகமான பக்தர்களையும் சமூக வலைத்தள கவனத்தையும் வைத்திருந்தால் சும்மா விடுவாரா என்ன?

ஆட்கள் யாரும் வருவதற்கு முன்னமே ஒருநாள் ஆண்டவர் தோன்றினார் அவர் முன்னால். வந்த காரணத்தை மறந்து; வழக்கம் போல "பக்தா...! உன் தவத்திற்கு மகிழ்ந்தேன். என்ன வரவேண்டும் கேள்" என்றார். நிலமையைப் புரிந்துகொண்டவர், சட்டென நாக்கைக் கடித்துக்கொண்டு பக்தனின் வரத்திற்கு காத்திருந்தார்.

வந்திருப்பது கடவுள்தான் என கைத்தூக்கி பாபாவும் அறிந்து கொண்டார். ஆழ்ந்த மூச்சினை இழுத்து விட்டவர். கடவுளின் கண்களை ஊடுருவிப் பார்த்தார். உடனே தனக்கான வரத்தைக் கேட்கலானார்

"கடவுளே... ஏதோ உணர்ச்சிவசப்பட்டு கையை தூக்கிட்டேன். அது அப்படியே 'லாக்' ஆகிடுச்சி... தயவு செய்து இந்தக் கையை மட்டும் இறக்கி கொடுத்திடு... அது போதுமெனக்கு!!!"

# அந்த மாலை (4/4)

# கல்யாண மாலை கொண்டாடும் பெண்ணே

ஸ்ரீராம்

இங்கிருந்து நேராக கல்யாண மண்டபத்துக்குதான் போகப்போகிறோம் என்று தோன்றி விட்டது அவருக்கு.

வினோத்துடனும் ரவியுடனும் ஏதோ பேசிக் கொண்டிருந்தாள் ரேணு.

நீ எப்பம்மா வைத்தியநாதன் மாமாவைப் பார்த்தே...? உனக்கெப்படி தெரியும்?"

"கேள்வியே தேவை இல்லையே அங்கிள்... வினோத் சொன்னான். போய்ப் பார்த்துட்டு வந்துட்டேன்."

"இப்போ அடுத்தது அவர் எண்ட்ரியா?"

"அய்... அஸ்கு புஸ்கு... அவர் எவ்வளவு பெரியவர்... நாமதான் அவர் இருக்கற இடத்துக்குப் போகணும்..."

அது என்றைக்குப் போகணும்? அதையும் நீயே சொல்லிடு... அவர் கிட்ட சொல்லி வச்சிருப்பே... தெரியும்... எனக்கும் சொன்னாதானே தயாராய் இருக்க முடியும்?"

"என்றைக்கா... அப்படி எல்லாம் இனி தள்ளிப் போடமுடியாது அங்கிள்... வாங்க போகலாம்..."

வினோவும் வினோத்தும் எழுந்து முன்னால் நடக்க, பாலாஜி மூர்த்திக்காகவும் ரேணுவுக்காகவும் காத்திருந்து சேர்ந்து நடந்தார். மூர்த்திக்கு ஆச்சர்யங்கள் அலுத்துப்போயிருந்தன. ரவி தயக்கத்துடன் சந்தியாவுடன் சேர்ந்து வந்தான். முன்னால் வினோத்-வினோ, பின்னால் ரவி-சந்தியா ஜோடியைக் கண்ட மூர்த்தி "திருடனுங்க" என்று தனக்குள் சொல்லிக் கொண்டார். அடுத்து எங்கே போகவேண்டுமோ என்று அவர்களுடன் மெல்ல நடந்தார்.

வாசலை நோக்கி நடந்த மூர்த்தி ரேணுவை, பாலாஜி கவனம் திருப்பி வினோ ஜோடியை நோக்கிக் கைகாட்டினார். அவர்கள் இதே போல பக்கத்தில் இருந்த இன்னொரு ஏ ஸி ஹாலுக்குள் அழைத்துச் செல்ல, அங்கே அமர்ந்திருந்தார் வைத்தி மாமா!

"எனக்கு ரொம்ப நேரமா காத்திருந்தா தோணினாலும் இது ரொம்ப ரொம்ப சீக்கிரம் வினோதா..." என்றார் வைத்தி மாமா.

"நீங்களுமா வைத்தி மாமா?" என்றார் மூர்த்தி.

"நல்ல விஷயம்தானே மூர்த்தி? ஒண்ணு தெரியுமோ... குழந்தைகள் மூணு வாரமா பிளான் பண்ணினதுகள்... போன வாரம் வினோத்தையும், ரவியையும் நீ அம்பத்தூர் அனுப்பிட்டே... இல்லாட்டா போனவாரமே கூட முடிஞ்சிருக்கும்... உனக்கேத்த மருமகள்... எனக்கு உன் சின்ன வயசு ஞாபகம் வர்றது..." என்றார் வைத்தி மாமா.

"சொல்லுங்க... என்ன சாப்பிடறீங்க...?"

"அட போப்பா... எனக்குப் பிடிச்ச ரவா தோசை ரெண்டு வாட்டி சாப்பிட்டுட்டு ரெண்டு காஃபி குடிச்சுட்டேன். யதேஷ்டம்..."

"நீங்களா நாள் குறிச்சு கொடுத்துருக்கீங்க?"

"ஆமாம்... அதுல எந்த நாள் சிலாக்கியம்னு வினோ சொல்லி இருப்பாளே... போகப்போக அவளே உனக்கு எல்லா சந்தேகத்துக்கு பதில் சொல்லிடுவாப்பா... கெட்டிக்காரி..."

மூர்த்தி வினோவைப் பார்த்தார். "எந்த மண்டபம் பிக்ஸ் பண்ணியிருக்கே?"

"முதலில் தேதி... அதில் நாலாவதா இருக்கற தேதி ஓக்கேன்னு நினைக்கறேன் அங்கிள்... வாரக் கடைசியில் வருவதால் வருபவர்களுக்கும் வசதி. ஆனால்... அங்கிள், நான் ஒண்ணு சொல்வேன்... யோசிச்சுப் பாருங்க... கோவிச்சுக்கக் கூடாது... "வினோ சற்றே தயங்கி நிறுத்தி இடைவெளி விட்டாள். பாலாஜி குறுக்கிட்டார்.

"சம்பந்தி... இப்போ சொல்லப்போகும் யோசனை என்னோடது இல்ல... எனக்கு விருப்பமும் இல்ல..."

சம்பந்தியா? மூர்த்தி வியந்து கொண்டார். எவ்வளவு வேகமாக ஏற்பட்டு விட்ட உறவுகள்!



"அப்பா... பயப்படாத... அங்கிள் உங்களை தப்பா நினைக்க மாட்டார். அது மட்டும் இல்ல... நான் உன்னை அப்படி எல்லாம் விட்டுடவும் மாட்டேன்..."

"புதிர்போடாம சொல்றியாம்மா...?

"அங்கிள்... கல்யாணத்துல நாம அதிகமா காசு செலவு செய்யப்போறதில்ல... என் அப்பாவுக்காக, சந்தியா அப்பாவுக்காக நான் இதைச் சொல்லல... பொண்ணு வீட்டு சைடாவே பேசல... ஒருவாட்டி வினோத் நீங்க கூட இந்தக் கருத்தைப் பேசிக்கிட்டிருந்ததா சொன்னான். எனக்கு அது பிடிச்சுப்போயி அப்புறமா தோணின ஐடியாதான் இது..."

பாலாஜி சங்கடத்துடன் மூர்த்தியைப் பார்த்தார். மூர்த்தி விநோதினியையே பார்த்துக் கொண்டிருந்தார்.
"சொல்லு..."

"முதல்ல ஏதாவது கோவில்ல தாலி கட்டிடறதுன்னு யோசிச்சோம். அப்புறம் அதென்ன ஏதாவது ஒரு கோவில்? குலதெய்வம் கோவில்ல தாலி கட்டிடறது... அப்புறம் ரெஜிஸ்டர் ஆபீஸ்ல கல்யாணம். அப்புறம் ஒரு ஹோட்டல்ல ரிஸப்ஷன். ஏன், வீட்டுல பெரியவங்க முன்னால தாலி கட்டிட்டு ரெஜிஸ்டர் ஆபீஸ் போயிடலாம்னு கூட யோசிச்சோம். அனாவசியமான ஜவுளிகள், மிச்ச செலவுகள் எல்லாம் கட் பண்ணிட்டு, அந்தப் பணத்தை அப்படியே பொண்ணு பேர்ல டெபாசிட் பண்ணிடறது... இதைதான் அப்பா கிட்ட நீ தப்பிக்க முடியாதுன்னு சொன்னேன்..."

""இது அவ யோசனைதான் சம்பந்தி... நீங்க வேற மாதிரி அபிப்ராயப்பட்டீங்கன்னா கல்யாணம் நீங்க எப்படி சொல்றீங்களோ அப்படி செய்துடலாம்..." பாலாஜி அவசரமாக இடைபேசினார்.

வைத்தி புன்னகைத்தார். 'மூர்த்திக்கேற்ற மருமகள். இவன் அநேகமாக ஆல்ரெடி ஓகே சொல்ல முடிவு செஞ்சிருப்பான்... மற்றவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று பார்க்க டிலே பண்றான்... அவ கிட்ட இதுக்கு அவன் கட்டாயம் ஒத்துப்பான்னு சொல்லி வச்சிருக்கேன்.'

மூர்த்தி எல்லோரையும் பார்த்தார். ரேணுவைப் பார்த்தார். ரேணுவுக்கு இதில் பெரிய சம்மதம் இருக்காது. ஆனால் எல்லோரும் சொன்னால் முணுமுணுத்தாலும் ஏற்றுக்கொண்டு விடுவாள். பொண்ணு வீட்டு சைட் பற்றிக் கவலை இல்லை. அவர்கள் இதற்கு சரி என்று சொல்லத் தயாராய் இருப்பார்கள். வினோத் தான் எதற்கெடுத்தாலும் எதிர்வாதம் செய்பவன்... காசு பெரிசு இல்லை என்பவன்...
"வினோத்... நீ என்ன சொல்றே?"

"நீ சொல்றதுதான்ப்பா... எனக்கு ஓகே... ஆனா உன்னோட, அம்மாவோட ரெண்டு பேரோட சம்மதம் முக்கியம்... மாமாவையும் கேட்டுடுவோம்... அம்மா?"

"அப்பா சொன்னா சரி..."

வைத்தியைப் பார்த்தார் மூர்த்தி. அவர் கண்களாலேயே சம்மதம் சொன்னார்.

"என்னைப் பொறுத்தவரையும் ஓகே. வேறு யாருக்கானும் ஏதாவது தோணினா சொல்லலாம்..." சந்தியாவைப் பார்த்தார்.

சந்தியா தலையாட்டினாள். "நாங்க எல்லாம் முன்னாலேயே கன்வின்ஸ் ஆயிட்டோம் மாமா..."

"அப்போ... எந்த ஹோட்டல்ல ஹால் மாதிரி கிடைக்குதுன்னு கேட்டுடலாம். இப்போவே ஆரம்பிச்சாதான் சரியா இருக்கும்... இன்னும் ஒன்றரை மாசம்தான் இருக்கா? இந்த ஹோட்டல்ல அப்படி ஏதாவது இருக்கோ?" மூர்த்தி திரும்பி ஹோட்டல் மேனேஜரை இங்கிருந்தே அளவெடுப்பபது போல பார்த்தார்.

"இருக்குப்பா... செகண்ட் ப்ளோர்... நம்ம சர்வர் மூலம் அதையும் பேசி ரிஸர்வ் பண்ணி வச்சிருக்கேன்..." என்றாள் வினோதினி.

புன்னகைத்தார் மூர்த்தி.

"அம்மா வினோதினி... நான் அசந்து போயிருக்கேன். என்ன மாதிரி பொண்ணும்மா நீ... வினோத் கவலை இனி எங்களுக்குத் தீர்ந்துடும். சந்தியாதான் சந்தேகமா இருக்கு. பதட்டமாவே இருக்கா..."

"அங்கிள்... இனி நானும் உங்களை மாமான்னே கூப்பிடறேன். மாமா... அவளும் லேசுப்பட்ட பொண்ணு இல்ல... அவகிட்ட ஒரு வீக்னஸ் இருந்ததால அடக்கி வாசிக்கறா... ரவி பத்தின கவலையையும் விடுங்க..."

ரவி சொன்னான். "அண்ணி ரொம்ப ஃபாஸ்ட். பயங்கரமா பிளான் பண்ணினா... இதெல்லாம் வொர்க்கவுட் ஆகுமான்னு எங்களுக்கெல்லாம் சந்தேகம். அப்பா எந்த நேரமும் சட்டென எழுந்து போயிடுவார்னு வினோத் பயமுறுத்தி வச்சிருந்தான்...."

அண்ணி! ஹூம்...

"நம்பிக்கைதான். மாமா எழுந்து போயிருந்தால் கதை அப்புறம் கொஞ்சம் கொஞ்சமா தொடரும். சிக்கனக் கல்யாணத்துக்கு மாமா ஒத்துக்கலைன்னா செலவு பண்ணி கல்யாணம் செய்யவும் தயாரா இருந்தோம். சேலையூர் தாண்டி ஒரு மண்டபம் பார்த்து வச்சிருந்தேன். ரொம்ப தூரம் அது. வர்றவங்களுக்கு கஷ்டம். இல்லைன்னா தேதியையே மாற்ற வேண்டியதிருந்திருக்கும். ஆனா வைத்தி மாமா தைரியம் கொடுத்தார்"

"நீங்க எப்படி இங்கே?" மூர்த்தி வைத்தியைப் பார்த்து கேட்டார்.

"அதுவா? போன வாரம், இல்லை அதற்கு முந்தின வாரம் இந்த சம்பவம் நடந்திருந்தா நீங்க எல்லோரும் வினோவோட கார்ல எங்க வீட்டுக்கு டிரைவ் பண்ணிக்கிட்டு வந்திருக்கணும்... இந்த வாரம் எனக்கு இந்த ஏரியால ஒரு வேலை வந்தது. என் ஸ்கூல் ஃபிரெண்டு சுந்தரராஜன்... உனக்குத்தான் தெரியுமே .... அவன் தன் மகன் வீட்டுல வந்து தங்கிட்டு என்னை இங்கு வரமுடியுமான்னு கூப்பிட்டான். அவனே ஊபர் புக் பண்ணிக் கொடுத்தான். சரின்னு வந்தேன். வினோ கிட்டயும் சொன்னேன். அவ இந்த வாரம் எப்படியும் முடிச்சுடறேன்னு சொன்னா"

"இந்த வினோத்தான் அவர் 'மூடை'க் கெடுத்து அனுப்பி வச்சான். அது கொஞ்சம் பயமா இருந்தது. நல்லவேளை... எல்லாம் சுபம்!" சிரித்தாள் வினோதினி.

"மாமா... கோபம் இல்லையே..."

"இல்லை" என்று தலையாட்டினார் மூர்த்தி. "நீ விரிவா செஞ்சு வச்சுருக்கற ஏற்பாட்டுல ஆடிப்போயிருக்கேன்மா நான்... ரொம்ப சந்தோஷம்..."

ரவி வினோத்தைப் பார்த்தான். "பார்றா... உன்னையோ, என்னையோ அப்பா எப்பவாவது இப்படி எல்லாம் பாராட்டி இருக்காரா?"

"அப்படி நீங்க நடந்துக்கலையேடா..."

"இப்போ அடுத்தது என்ன? ரேணு கேட்டாள்.

"அத்தை... நைட் ஆகாரம் இங்கேயே கிட்டத்தட்ட முடிஞ்சுடுச்சு. வீட்டுக்குப்போய் தூங்கறோம்... நாளைலேருந்து ஆகவேண்டிய வேலைகளைப் பார்க்கறோம். மாமா... நாளைக்கு அல்லது நாளை மறுநாள் சாயங்காலம் நான் உங்க வீட்டுக்கு வந்து உங்களையும் அழைச்சுக்கிட்டு வைத்தி மாமா வீட்டுக்குப் போறோம்... பத்திரிகை மாடல் வச்சிருக்கேன்... அதை முடிச்சிடலாம்..."

"அதுல என்ன புதுமை வச்சிருக்கியோ..."

மூர்த்தி வாழ்வில் இதுவரை இல்லாத திருப்தியுடன் முன்னே நடந்தார். சட்டென பல தளைகளிலிருந்து விடுதலை போல இருந்தது அவருக்கு.

[நிறைந்தது]



# நிஸ்வா என்றொரு பழமையான நகரம்!!!



இளங்கோ ராமசாமி



## பகுதி : 3 - நிஸ்வாவின் நிழலில் - கோட்டையும் குட்டிச் சுவர்களும்!!!



கடந்த இதழில் வாசித்த அதிகாலையில் எழுந்து சந்தைக்குப் போன அனுபவக் கதையை மறந்திருக்க மாட்டீர்கள் என நம்புகிறேன். மறந்திருந்தாலோ வாசிக்கத் தவறியிருந்தாலோ செப்டம்பர் மாத விண்மீன் இதழை
ஒரு புரட்டுப் புரட்டி விட்டு வந்து விடுங்கள். அப்பொழுதுதான் இந்தக் கட்டுரையை முழுமையாகப் புரிந்து ரசிக்க முடியும்.

சந்தையைச் சுற்றிப் பார்த்துக் களைத்துப் போன கால்கள் ஓய்வை வேண்டிக் கெஞ்சும். வயிறு கப கப வெனப் பசியில் தகிக்க ஆரம்பித்திருக்கும். அந்தச் சமயத்தில் வண்டியைக் கிளப்பி ஃபலஜ் தாரிஸ் ஹோட்டலைக் கடந்து சிறிது தூரம் சென்றால் Al Funahan Al Dhabi என்ற ஒரு சிறிய உணவகம் கண்ணில் படும். அதன் கூரையில் ஒரு பெரிய ஓமானி காஃபி கூஜா பொம்மை நிறுவப் பட்டிருக்கும். அது தான் அந்தக் கடையின் அடையாளம்.

நிஸ்வாவில் ‘ரஃகால்’ அல்லது ‘ரகாக்’ எனப்படும் ஓமானி தோசையை உண்ண விரும்பினால் நான் செல்வது அக்கடைக்குத் தான். கோதுமை மாவில் தண்ணீரை ஊற்றிக் கரைத்து மிக மெல்லியதாகவும் பெரிதாகவும் தோசைக்கல்லில் ஊற்றித் தேய்த்து மொறு மொறுவென சுட்டெடுக்கப் படும் இந்தத் தோசை தான் ஓமானிகளுக்குப் பிரியமான காலை உணவு. இந்தத் தோசை சுடத் தெரியாத ஓமானி பெண்களுக்குத் திருமணம் ஆவது கடினம் எனச் சொல்லும் அளவிற்கு இது அவர்கள் வாழ்வில் இன்றியமையாதது.

இந்தத் தோசையை வார்த்து அதன் மீது முட்டை, சீஸ், ஸாத்தர் என்னும் மூலிகைப் பொடி, தேன், ஓமான் சிப்ஸ், ஏன் நுட்டெல்லா என விதவித மான சரக்குகளைத் தூவியும் பூசியும் நமது விருப்பத்திற்கேற்பக் கொடுப்பர்.

உங்களை அந்தக் கடைக்கு அழைத்துச் சென்று ரகத்திற்கு இரண்டாக எல்லா ரக தோசைகளையும் வாங்கிக் கொடுத்து நீங்கள் அவற்றைச் சிலாகித்து உண்பதைக் கண்டால் தான் எனக்கு வயிறும் மனமும் நிறையும்.




அங்கேயே நல்ல திக்கான கரக் சாய் எனப்படும் நம்ம ஊரின் தரமான பால் டீ கிடைக்கும். ஆளுக்கு நாலைந்து தோசைகளையும், ஒரு தேநீரையும் உள்ளிறக்கினால் வயிறு திம்மென்றாகி ஒரு மாதிரி போதையேறும். அப்படி உண்ட களைப்புத் தீர உங்களை அலுங்காமல் குலுங்காமல் கொண்டு போய் அறையில் இறக்கி விடுகிறேன். நீங்கள் நன்கு உறங்கி ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். ஏனெனில் அதன் பிறகு உங்களை நிஸ்வாவின் புகழ் பெற்ற கோட்டைக்கு அழைத்துச் செல்லப் போகிறேன். அந்தக் கோட்டையின் உள்ளே நிறைய ஏறி இறங்கவும் நடக்கவும் வேண்டியிருக்கும். இரண்டு மூன்று மணி நேரங்களை விழுங்கும் அளவிற்குப் பெரிய கோட்டை.

நீங்கள் உறங்கிக் களைப்பாறி எழுவதற்குள் நான் கோட்டையைப் பற்றிய வரலாற்றுத் தகவல்களைத் தேடிப் பிடித்துக் கோர்த்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் வந்தவுடன் நாம் கோட்டையைச் சுற்றிப் பார்க்கலாம் சரியா?

நிஸ்வாவின் இதயப் பகுதியில் கம்பீரமாக உயர்ந்து நிற்கும் கோட்டை ஓமானின் தனித்தன்மை வாய்ந்தது. 700 ஆண்டுகள் பழமையான இக்கோட்டையின் மிகப்பெரிய வட்ட வடிவ கண்காணிப்புக் கோபுரம் இதனை ஓமானில் உள்ள மற்ற கோட்டைகளில் இருந்து பெரிதும் வேறுபடுத்திக் காட்டுகிறது.

இக்கோட்டையின் இன்றைய இந்த வடிவத்திற்கு உரு கொடுத்தவர் 1650 களில் நிஸ்வாவை ஆண்ட சுல்தான் பின் சைஃப் அல் யரூபி என்ற இமாம். யரூபி ராஜ்ஜியத்தின் ஸ்தாபகரான இந்த இமாம், ஓமானைத் தங்கள் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்த போர்ச்சுக்கீசியர்களைப் போரில் வென்று நாட்டை விட்டுத் துரத்தியவர்.

போர்ச்சுக்கீசியர்களுடனான போருக்குப் பிறகு 12 ஆண்டுகள் இக்கோட்டையைப் பலப் படுத்தும் பணி நடந்திருக்கிறது. அதன் பிறகு நூற்றாண்டுகளாக இந்தக் கோட்டை பல முற்றுகைகளையும் போர்களையும் தாங்கி உறுதி குலையாமல் நிஸ்வாவின் பெருமையாக நின்று வந்திருக்கிறது. 1957 ஜபல் அக்தர் போரில் ஆங்கிலப் படைகளின் தாக்குதலில் சிதிலமடைந்த இக்கோட்டை 1997 ஆம் ஆண்டு மீண்டும் மிகச் சிறப்பாகப் புனரமைக்கப்பட்டு இன்று அதன் பழமை குன்றாது காட்சியளிக்கிறது.

நிஸ்வாவின் புகழ்பெற்ற இக்கோட்டை ஓமானிகளின் ராணுவத் தந்திரத்திற்கும், தற்காப்பில் அவர்களுக்கு இருந்த சாதுர்யத்திற்கும் சான்றாக நிற்கிறது. போர் தொடுத்து வரும் எதிரிகளது கண்களைக் கட்டிக், குழப்பி, அவர்களைத் திக்கு முக்காட வைக்கும் பல உத்திகள் இக்கோட்டையில் உண்டு. இக்கோட்டையின் முக்கியச் சிறப்பே 100 அடி உயரமும் 150 அடி விட்டமும் கொண்ட வட்ட வடிவக் கண்காணிப்புக் கோபுரம் தான். அக் கோபுரத்தின் மேற்தளத்தில் 360 டிகிரியிலும் பீரங்கிகளையும் துப்பாக்கிகளையும் நிறுவி, எதிரிகளிடம் இருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ளும் வகையில் இக்கோட்டை மிக வலுவாக வடிவமைக்கப் பட்டிருக்கிறது. இக்கோட்டைச் சுவர்கள் பீரங்கிக் குண்டுகளால் துளைக்கப்பட முடியாத அளவிற்குக் கடினமானவை. மிக உறுதியான பெரிய மரக் கதவுகள் இதனைக் காத்து நிற்கின்றன. கோட்டை வாயிலில் இரண்டு பீரங்கிகள் அலங்காரமாகக் காவல் காக்கின்றன.

இந்தக் கோட்டையில் மறைவிடங்கள், ரகசியப் பாதைகள், பொய்க் கதவுகள், கிணறுகள், என நாம் கண்டு ரசிக்க ஏராளமான அம்சங்கள் உண்டு. எதிரிகள் முன்புறம் இருக்கும் பெரிய மரக் கதவுகளை எப்படியோ தகர்த்து உள்ளே நுழைந்தாலும் அவர்களது உயிருக்கு உத்திரவாதம் கிடையது. உள்ளே நுழையும் எதிரிகளைத் தாக்கி அழிக்க பல அடுக்கு தற்காப்பு ஏற்பாடுகளை இக் கோட்டை கொண்டிருந்திருக்கிறது.

வட்ட வடிவ கோபுரத்தின் உச்சிக்குச் செல்ல ஒரே ஒரு குறுகிய படிக்கட்டு மட்டுமே இருக்கிறது. அந்த வழியிலும் ஆங்காங்கே மரணத் துளைகளை ஏற்படுத்தி வைத்திருக்கின்றனர். மேலேறி வரும் எதிரிகளை அந்த மரணத் துளைகளின் வழியே கொதிக்க வைத்த எண்ணை, கொதிக்க வைத்த பேரீச்சம் பழ ரசம், வெந்நீர், போன்றவற்றைக் கொட்டி உருத்தெரியாமல் பொசுக்கும் உத்திகளை வகுத்து வைத்திருக்கின்றனர்.

வழக்கத்திற்கு மாறான இக்கோட்டையின் வட்ட வடிவம் அதன் உண்மையான அளவை விடப் பெரியதாகக் காட்சியளித்து எதிரிகளை மிரட்சிக்குள்ளாக்கும் விதத்தில் கட்டப்பட்டிருக்கிறது. மேற்தளத்தில் இருந்து பார்க்கும் போது கோட்டையைச் சுற்றிலும் இருக்கும் பேரீச்ச மரத் தோப்புகளும் அவற்றின் பின்னணியில் தொடுவானுக்கருகில் இருக்கும் ஹஜர் மலைத்தொடர்களும் நமது கண்களுக்கு அரு விருந்து. நவம்பர் முதல் பிப்ரவரி மாதம் வரையிலான குளிர் பருவத்தில் நல்ல நண்பகலிலும் மேற்தளத்தில் நின்று பார்க்கும் போது குளிரெடுக்கும். சில்லென்ற காற்று மனதை வருடிச் செல்லும்.

இக்கோட்டைக்குத் தேவையான நீரைத் தேடி வெளியே செல்லத் தேவையில்லை. கோட்டைக்குக் கீழேயே வற்றாத நீரோடை ஓடுகிறது. கிணறுகளும் இருக்கின்றன. மண்ணும், கற்களும், சுண்ணாம்பும், ஜிப்சமும் கலந்து கட்டப்பட்ட இக் கோட்டைச் சுவர்கள் பீரங்கிக் குண்டுகளையும் தாங்கி நிற்கும் ஆறு அடி தடிமனுள்ளவை.

தனித்தன்மையான கட்டிடக் கலைக்காக மட்டுமின்றி இக்கோட்டை ஓமானின் கலாச்சாரச் சின்னமாகவும் ஒளி வீசுகிறது. இதனுள் இருபதுக்கும் மேற்பட்ட அரங்கங்களில் புராதன நகைகள், ஆயுதங்கள், பாத்திரங்கள், மரப் பெட்டிகள், கைவினைப் பொருட்கள், ஆடை அணி கலன்கள், ஓமானிகளின் வரலாற்றையும், கலாச்சாரத்தையும் பறைசாற்றும் அரிய புகைப்படங்கள், அவர்களுடைய வாழ்வியல், மதம் எனப் பல்வேறு கூறுகள் மிக நேர்த்தியாகக் காட்சிப் படுத்தப் பட்டுள்ளன.

இக்கோட்டை ஓமானின் கலாச்சாரத் தலை நகராகவும், ஓமான் இமாமேட்டாக இருந்த போது பல நூற்றாண்டுகள் அதிகார மையமாகவும் செயல்பட்டது. இங்கு கல்வியும், மதமும், வர்த்தகமும், அதிகாரமும் செழித்து வளர்ந்தன. இன்றைய நிஸ்வாவின் செழுமைக்குக் காரணம் இந்த வலுவான அதிகார மையமே.

இவ்வளவு சிறப்புக்கள் இருப்பினும் இக்கோட்டையை நமது ராஜஸ்தானில் இருக்கும் கோட்டைகளுடன் ஒப்பிட்டால் இது அளவில் மிகவும் சிறியது. இதன் அறைகள் மிக மிகச் சிறியவை. இதில் காணப்படும் பெரிதாக வேலைப் பாடுகள் எதுவும் அற்ற மண் சுவர்களும் சிறிய சாளரங்களும் நமக்கு, "'அட இவ்வளவு தானா?" என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கக் கூடும்.

இக்கோட்டையினுள்ளேயே ஒரு சிறிய தோப்பு இருக்கிறது. அங்கு மாடுகளைப் பூட்டி ஏற்றம் இறைக்கும் பழங்கால நீர்ப்பாசன முறையைக் காட்சிப் படுத்தியிருக்கின்றனர். தினமும் ஒரு இளைஞர் ஓமானி அல்வாவைக் கிளறும் செயல் முறை விளக்கமும் நடைபெறும். கோட்டையின் உட்புறம் சமையலறை, இமாமின் படுக்கை அறை, மதராஸா, விருந்தினர்கள் அறை, வழிபாட்டு அறை, ஆயுத அறை, தானிய அறை, ஒரு சிறு சிறைச் சாலை எனச் சுற்றிப் பார்க்க பல பகுதிகள் இருக்கின்றன.

மேலும் கீழும் நடந்து அலைந்து களைத்துப் போனவர்கள் இளைப்பாற ஒரு கஃபேவும் இருக்கின்றது. மதியம் இரண்டு மணி போல உள்ளே நுழைந்தால் நான்கைந்து மணி வரை நிதானமாகச் சுற்றிக் கொண்டிருந்து விட்டு வெளியே வரும் போது மேற்கில் சூரியன் கீழிறங்கிக் கொண்டிருப்பான்.

கோட்டையில் இருந்து சந்தைக்குப் போகும் குறுகிய தெருவின் கிழக்குக் கோடியில் ஒரு வாயில் இருக்கிறது. வடக்குப் பார்த்த அந்த நுழைவாயிலின் மேலே இருக்கும் ஒரு அழகிய உணவகத்தில் அமர்ந்து குளிர்கால மாலை நேரத்தை ஒரு சில சமோசாக்களோடும் ஒரு தேநீரோடும் துளித் துளியாகச் சுவைத்துக் கொண்டே அன்றைய தினத்தின் அனுபவங்களை அசை போடலாம். அது பரபரப்பான கோட்டையின் சுற்றுப்புற நிகழ்வுகளைக் கண்டு ரசிக்கத் தோதான இடம்.

நாம் நிஸ்வாவின் புகழ்பெற்ற சந்தையும் கோட்டையும் தந்த அனுபங்களில் இருந்து வெளிவருவதற்குள்ளாகவே மாலை மங்கி இருள் கவிந்து விடும். அதற்காகவே காத்திருந்த நான் உங்களை அழைத்துக் கொண்டு கோட்டையில் தென்புறமாக பழைய நிஸ்வா நகரத்தின் குறுகலான வீதிகளுக்குள் ஒரு நடை செல்வதே அடுத்த திட்டம்.

அந்தக் குறுகிய தெருக்களின் இருபுறமும் இடைவெளியின்றி சிறிதும் பெரிதுமாக சிதிலமடைந்த பழைய மண் வீடுகள் இருப்பதைக் காண முடியும். சமீப காலமாக அவற்றில் பல வீடுகள் புனரமைக்கப்பட்டு விடுதிகளாகவும், காஃபி ஷாப்புகளாகவும், ஐஸ்க்ரீம் பார்லர்களாகவும், குட்டிக் குட்டி துரித உணவகங்களாகவும் மின்ன ஆரம்பித்துள்ளன. இரவின் நிழலில் அத்தெரு அழகிய வண்ண வண்ண சரவிளக்குத் தோரணங்களால் ஜோடிக்கப்பட்டு ஒரு மாய லோகத்தைப் போலக் காட்சியளிக்கிறது. ஒவ்வொரு பத்தடிக்கும் ஒரு புதிய காஃபி ஷாப்பும் அதன் மேசைகளில் அமர்ந்து மகிழ்ச்சியாக உரையாடிக் கொண்டு, வித விதமான கோணங்களில் படம் பிடித்துக் கொண்டிருக்கும் மனிதர்களை வேடிக்கை பார்த்தவாறே நடந்தால் பத்து நிமிடங்களுக்குள் ‘அல் அக்கர்’ என்ற பெரும் மதிற் சுவரைச் சென்றடைந்து விடலாம்.

17 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இந்த மதிற் சுவர் சுமார் 2 கீ மீ சுற்றளவு கொண்டது. 20 முதல் 23 அடி உயரம் கொண்ட இந்த மதிற் சுவர் ஆறு முதல் எட்டு அடி அகலம் கொண்டது. இதன் மேற் தளத்தில் நாம் காலார நடக்க முடியும். இச்சுவரில் குறிப்பிட்ட இடை வெளிகளில் ஆறு கண்காணிப்புக் கோபுரங்கள் உள்ளன. தோராயமாக ஒவ்வொன்றும் 35 முதல் 45 அடி உயரம் கொண்டவை. அக்காலத்தில் கவர்னர்கள், நீதிபதிகள், மதகுருமார்கள், ராணுவத் தளபதிகள், அரசின் உயர் அதிகாரிகள் வாழ்ந்த இந்த அதிகார மையத்தை எதிரிகளிடம் இருந்து காக்கும் பொருட்டுக் கட்டப்பட்ட இந்த வலுவான கோட்டைச் சுவர் கடந்த அறுபது எழுபது ஆண்டுகளாகப் பராமரிப்பின்றி சிதிலமடைந்து கிடந்தது.

கொரோனாவின் பிடியில் உலகம் முடங்கிக் கிடந்த போது நிஸ்வாவின் சமூகம் ஒன்றிணைந்து இந்தச் சுவரைப் புனரமைக்க முடிவு செய்து வேலைகளைத் துவக்கினர். முதலில் 700 மீட்டர் நீளமுள்ள சுவர் புனரமைக்கப்பட்டு பொதுமக்கள் பார்வைக்குத் திறந்து விடப் பட்டது. அந்தச் சுவரின் மீது ஒரு சிறு நடை போய் வர ஓமானிகளுக்கு 500 பைசாக்களும் (இந்திய மதிப்பில் 113 ரூபாய்) பிற தேசத்தவர்களுக்கு ஒரு ரியாலும் கட்டணம் வசூலிக்கின்றனர். ஒரு ரியால் என்பது ஆயிரம் பைசா.

இந்தச் சுவர் புனரமைக்கப்பட்டதால் அதன் பாதுகாப்பில் இருந்த குட்டிச் சுவர்களாய்க் கவனிப்பாரற்றுச் சரிந்து கிடந்த மண் வீடுகளும் மெள்ள மெள்ளப் புத்துயிர் பெற்று உயிர்த்தெழுந்து கொண்டிருக்கின்றன. ஆங்காங்கே தங்கும் விடுதிகளும், காஃபி ஷாப்புகளுமாக கூன் விழுந்து, கண்கள் பஞ்சடைத்துப் போய்த் தோல் சுருங்கிப் பரிதாபமாகக் கிடந்த கிழவியைப் போலச் சோம்பிக் கிடந்த அந்தப் பழைய ஊர் இன்று பருவமடைந்த இளம் பெண் போன்று தன்னைச் சோடித்துக் கொண்டு கண்களை உறுத்தாத சீன விளக்குகளின் வெளிச்சத்தில் தக தகவென மினுக்கிக் கொண்டிருக்கிறது. சுவரின் மறுபுறம் நெடித்துயர்ந்த பசுமையான பேரீச்சமரங்களும் சல சலத்து ஓடும் ஃபலஜ் எனப்படும் நீரோடைகளும். இவற்றைக் கண்டு ரசித்தவாறே நடப்பதற்கும் இந்த பழமை மாறாச் சூழலில் ஓரிரு நாட்கள் தங்கி அமைதியாக இளைப்பாறவும் மக்கள் சாரி சாரியாக வருகின்றனர். குறைந்த முதலீட்டில் நிறைந்த வருமானம் பார்க்கும் இந்த எளிய ஓமானிகளின் ஒற்றுமையைப் பார்க்கப் பார்க்க எனக்குப் பெருமையாக இருக்கிறது.

அவர்கள் மிகவும் நிதானமாக ஆனால் மிக உறுதியாக ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்து முன்னேறுவதைக் கடந்த சில ஆண்டுகளில் கண்கூடாகக் காண்கிறேன். இந்தச் சுவரைப் புனரமைக்கும் பணி 2028 ல் தான் நிறைவுறும் என நம்பப் படுகிறது. அதற்கு மேலும் ஆகலாம். ஆனால் 2020 க்கு



முன் வெறும் குட்டிச் சுவர்களாக யாரும் சீந்துவாரற்றுக் கிடந்த, கார்கள் வசதியாகச் சென்றுவர முடியாத ஒரு பழைய இடிபாடுகள் நிறைந்த பகுதி இன்று மிகவும் பரபரப்பான தொரு சுற்றுலாத் தளமாக மாறியிருப்பது ஆர்வமுள்ளோருக்கு ஒரு பாடம்.

இந்தியாவின் மூலை முடுக்குகளெல்லலாம் இப்படிப்பட்ட தனித்தன்மையான லட்சக் கணக்கான கிராமங்கள் உள்ளன. எனது பூர்வீகமான தும்பிவாடி என்ற சற்றே பெரிய கிராமத்திலும் இது போன்ற குறுகிய தெருக்களும் காரைப் பூச்சுப் பூசப்பட்ட, தேக்கு மர விட்டங்களையும், தூண்களையும், தடித்த மரக் கதவுகளையும் கொண்ட பழமையான வீடுகள் உள்ளன. ஊர் மக்கள் ஒன்று கூடி ஒற்றுமையாக உழைத்தால் இப்படிப் பட்ட கிராமங்களைச் சுற்றுலாத் தளங்களாக நிச்சயமாக மாற்ற முடியும். ஆனால் அது நடக்குமா? என மனம் ஏங்கிக் கிடப்பது வழக்கமாகி விட்டது.

நிஸ்வாவிற்குக் குடியேறி பத்தாண்டுகளுக்கு மேலாகியும் கடந்த ஓராண்டுக்கு முன்புதான் அந்தச் சுவர் இருக்கும் பகுதிக்குள் முதன் முதலில் கால் வைத்தேன். அதன் பிறகு பல முறை பல நண்பர்களை அங்கு அழைத்துச் சென்று சுற்றிக் காட்டி வந்துள்ளேன். ஒவ்வொரு முறை செல்லும் போதும் அங்கு ஏற்படுத்தப் பட்டுள்ள ஏதேனும் ஒரு புதிய அம்சம் என்னை ஆச்சரியத்திற்குள்ளாக்குகிறது. கடந்த முறை அந்தச் சுவரில் ஒரு ஈராக்கியக் கலைஞர் புடைப்புச் சிற்பமொன்றை உருவாக்கிக் கொண்டிருந்தார். இப்படி கேலக்ஸியின் வாசகர்களை விண்மீன் இதழ் வழி அழைத்துச் சென்று அச்சுவரைச் சுற்றிக் காட்டியதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

இரவு உணவை அங்கிருக்கும் ஏதேனும் ஒரு உணவகத்தில் முடித்துக் கொண்டு நீண்ட நாளின் களைப்புத் தீர அறைக்குச் சென்று நிம்மதியாக உறங்கி ஓய்வெடுத்துக் கொண்டிருங்கள். நீங்கள் விழித்துப் பார்க்கும் போது நவம்பர் மாத விண்மீன் இதழோடு உங்கள் முன் நிற்பேன். அடுத்த இதழில் உங்களை ஓமானின் மிகப்பெரியதும், மிக நவீனமானதுமான Across Ages அருங்காட்சியகத்திற்கு அழைத்துச் செல்கிறேன்.

# மாயநிழல்
# (நிறைவுப் பகுதி)

அன்பாதவன்



(கதையின் நீளம் கருதி, இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு முதல் பகுதி செப்டெம்பர் இதழில் வெளியானது)

"அப்பா உங்களுக்கு விசிட்டர் வந்து இருக்காங்க"

முதல் நாளில் அனஸ்தீசியா மயக்கம் சற்றே குறைந்த மாலை நேரம்.

ஐசியூ- வில் பார்வையாளர்களை அனுமதிப்பார்களா...? கேள்வி அவனுக்குள் எழுகையில் ஸ்கிரீனை விலக்கி மெதுவாக படுக்கை அருகே வந்தவளைப் பார்த்து ஆச்சரியப்பட்டான். அது ராஜேந்திரனின் இல்லத்தரசி பார்வதி.

"எப்படி இருக்கீங்க...?"- வினவியவள் விழிகளில் நீர்த்தாரை.

"ஏம்பா அழுவுற... உன்னோட தாலிபாக்கியம்தான் என்னையக் காப்பாத்திடுச்சே..."

"நீங்க நல்லபடியா சொஸ்தமாயி வந்தபிறகு குலதெய்வம் மலையனூரம்மா கோயிலுக்கு போகணும் சரியா..."

"ஆகட்டும்... பூரணமாக் குணமாகட்டும்... பார்க்கலாம்..." சரி நீ கவலைப்படாமப் போ. தம்பி... பாப்பாவ... மாப்பிள்ளையை கவல இல்லாம இருக்கச் சொல்லு அம்மா கிட்டேயும் பதமா விவரம் சொல்லு... பத்தரமா போங்க..." கண்ணீரைத் துடைத்தபடி மெல்ல நடந்து பார்வையில் இருந்து மறைந்தாள்.

உண்மைதான் இயற்கையின் அழைப்பு இப்போதைக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. 'போனஸ் வாழ்க்கை தரேன் வாழ்ந்துக்க தலைவா' என மரண தேவதையின் மாயக் குரல்.

'எதற்காக இந்த மரண ஒத்திவைப்பு தீர்மானம்...? ஏதோ நல்லதுக்காகத்தான் இருக்க வேண்டும்! இந்த சமூகத்துக்கு நான் செலுத்த வேண்டிய கடன்கள் நிலுவையில இருக்குதோ... every thing for goodsake என்பார்களே... அதுபோல எல்லாமும் நன்மைக்கேவா...' ராஜேந்திரனின் மனதில் அடுக்கடுக்காய்ச் சிந்தனை வளையங்கள்.

"அப்பா பிபி செக் பண்ணிடவா..." செவிலியின் அழைப்பு எதார்த்த உலகுக்கு அவனை அழைத்து வந்தது .

மனைவி சென்ற சிறிது நேரம் கழித்து பாசப்பறவையான அவன் தம்பி செந்தில் வருகை. மெதுவாக சப்தமின்றி படுக்கையின் அருகில் வந்தவன் அழகுவின் கை விரல்களை வாஞ்சையோடு கோர்த்துக் கொண்டான்.

"எப்படி இருக்கண்ணா..." உணர்ச்சி மேலிடலில் அவன் குரலிலொருத் ததும்பலான நெகிழ்வு.

"நீதான் காக்கும் கடவுளாக கொண்டாந்து சேத்து காப்பாத்திட்டியே... அண்ணனை மீட்ட சுந்தரபாண்டியன்..."

"கொழுப்பு குறையலையே இன்னமும்"

"கூடப்பொறந்ததாச்சே அவ்ளோ சீக்கிரம் குறையுமா...? மீனாட்சி எங்க வெளியிலயா ஒக்காந்திருக்கு..."

"ஆமா மீனாட்சி... திலீபன்... தாரகன்... மூணு பேரும் வெளியே ஒக்காந்து இருக்காங்க... எல்லாரையும் உள்ள விட மாட்டாங்களாம்... சரிண்ணா... முக்கியமான விஷயம் என்னன்னா..."

"என்ன... ஹாஸ்பிடல் பில் விஷயமா...?"

"ஆமா... பேசலாமா... ஒனக்கு ஒன்னும் பிரச்னையில்லையே...?"

"ஐசியூ வுல இருக்கிறவனுக்கு என்ன... வெளியிலத் திண்டாடுற ஒனக்குத் தான் எல்லாக்கவலையும்... சொல்லு"

"மீனாவோட கிரெடிட்கார்டில இருந்து 50,000, உன்னோட கிரெடிட்கார்டுல இருந்து நாப்பதாயிரம் அட்வான்ஸ் கட்டியிருக்கிறன்... பிஆர்ஓ சரவணன் சார் கிட்டப் பேசி இருக்கேன். இன்சூரன்ஸ்பார்ம் எல்லாம் எடுத்துக்கிட்டு இன்னிக்கி வரேன்னு சொல்லியிருக்காரு. உன்னோட ஒரு மொபைல் என்கிட்ட தான் இருக்கு..."

“நல்லது யார் அழைப்பையும் எடுக்காத இப்போ தேவையில்லாம PANIC ஆக்க வேணாம். திலீபன் கிட்ட பேசு... கொஞ்சம் பயந்திருப்பான் போல...”

“நானுந்தான் பயந்துட்டேன் ஆனா வெளியே காட்டிக்கல தெரியுமா... டாக்டர் என்னாசொன்னார் தெரீயுமா... GOLDEN HOUR ன்ற சரியான நேரத்துக்கு அவர கொண்டாந்து அட்மிட் பண்ணிட்டீங்க சார்ன்னாங்க”

“தாயுமானவன் தந்தையுமானவனா ஒன்னையப் பாத்திருக்கேன் இப்போ எனக்கு ஆபத்பாந்தவனாவும் ஆயிட்ட...” புன்னகைத்தப்படியே கை கூப்பினான் ராஜேந்திரன். அவன் விழிகளில் நன்றி மின்னும் கண்ணீர் வைரம்.

“பேச்சைக் குறைண்ணா... உணர்ச்சி வசப்படுற நேரமா இது...”

“சரிப்பா... சாரிப்பா... ஆனால் S O S, I O U போன்ற அப்ரிவேஷனுக்கு எல்லாம் பொருள் விளங்கிய நேரம் இது “

“வுட்டா கதாகாலேட்சேபமே நடத்துவியே... சரி கௌம்புறேண்ணா. கவனமா இரு... ஒடம்ப பாத்துக்க...”

கவனமாய் இருக்க வேண்டும். இனிமேல்தான் மிக கவனமாக இருக்க வேண்டும். ராஜேந்திரன் மனதோடு பேசினான். புதிய பிரதிக்ஞைகளைப் பதித்தான்.

ஐசியூ வார்டின் ஆச்சரியங்களில் ஒருவர் டாக்டர் ரத்தினவேல் அவ்வளவு சீரியஸான மருத்துவமனையில் புன்னகைப் பூமுகத்தோடு வலம்வரும் அவரைப் பார்த்தால் நோய்களும் பயந்தோடிப் பறந்தோடும்.

“குட் டே சார்... ஹவ் யூ ஃபீல் நவ்...”

“இப்போ பெட்டரா ஃபீல் பன்றன் சார்... நெஞ்செரிச்சலோ இதயவலியோ இல்ல... தலயிலிருந்து ஊத்தன வேர்வையும் நின்னுடுச்சு...”
“அப்புறமென்ன...நீங்க பெர்பெக்ட்லி ஆல்ரைட்... “

“அதெல்லாம் சர்தான் சார்... எனக்கு என்னதான் ஆச்சு... ஒரு பேஷண்ட்டா இத நான் தெரிஞ்சுக்கலாமில்லையா...?

“ஒய் நாட்... உங்க உடம்பப்பத்தி நீங்க கட்டாயம் தெரிஞ்சுக்கணும். எதிர்பாராத் தருணத்தில நாம எதிர்பாராதவை நிகழும் காலம் இது...! எதுவும் நிகழலாம் எப்போது வேண்டுமானாலும் நிகழலாம். YES, it's an unpredictable world. Unpredictable Time” ரத்தினவேல் சாரின் கண்களில் ஏதோ ஒரு வெளிச்சம். ஆங்கிலமும் தமிழும் கலந்து பேசினாலும் குரலில் வலிய உறுதி.

“யெஸ்... அக்ரீட் சார்”

“இந்தச் சூழலில் ஸ்ட்ரெஸ்ஸைத் தவிர்க்கவே இயலாது. பழகும் குடும்பத்தில... பயணிக்கும் சாலையில... பணி செய்யுற சூழலில... எங்கேயும் எப்பொழுதும் நம்மைச் சூழ்ந்திருக்கும் மன அழுத்தத்தோட மாயநிழல். பல நேரங்கள்ல ஸ்ட்ரெஸ்-ன்றது கடுமையான நோய்களுக்கானப் பன்னீர்த்தெளிப்பு.

உங்களுக்கிருக்கிறது ரெண்டு பிளாக் தான். அதனால ஸ்டென்ட் வைக்க வேணாம். இப்போதைக்கு ரத்தக்குழாய விரிவாக்கின பலூனிங் [Ballooning] செய்திருக்கிறோம்.”

“பலூனீங்ன்னா...”

“ஒன்னும் பயப்பட வேணா... இரத்தக்குழாய்ப் பாதையை கொஞ்சம் அகலப்படுத்தி ரத்த ஓட்டத்த சீராக்கி இருக்கோம் அவ்ளோ தான் அநேகமாய் உங்களுக்கு பைபாஸ் ஆபரேஷன் தேவைப்படலாம். ஆனா இப்போதைக்கு உறுதியா சொல்ல முடியாது. இன்னும் ரெண்டு மூணு டெஸ்ட் எடுத்துட்டு கன்ஃபார்ம் பண்றோம். அதே நேரத்தில நாங்க கொடுக்குற மருந்து மாத்திரைகளை சரியான நேரத்திற்கு சாப்பிடுங்க. டயட் ஃபுட் மெயின்டைன் பண்ணுங்க... சரியா...! டயட் உணவு உங்க வெயிட்டை குறைக்கும். டயபடிஸ் கொஞ்சம் கொஞ்சமா ரெடியூஸ் பண்ணி நார்மாலாக்கும்.

‘இரத்தக் குழாய்ல அடைப்பு பத்தி கொஞ்சம் எக்ஸ்ப்ளெய்ன் பண்ணுங்க சார்...”

தமனி (Arteries)ந்றது நம்ம இருதய அமைப்பின்படி, இதயத்தில் இருந்து உடலில் அனைத்து செல்களுக்கும் ஆக்சிஜன் நிறைந்த ரத்தத்தை விநியோகிக்கும் Swiggy Boyன்னு சொல்லலாம். நம் உடல் முழுவதும் ஊட்டச்சத்துக்களை, ஹார்மோன்களை மட்டும் உயிர் வலியைப் பரவலாக்குவதில் முக்கியப் பங்காற்றுவது தமனிகள்.

தமனிகள் இதயத்திற்கு வெளியே ரத்தம் எடுத்து செல்லும் பணியில் ஈடுபடுபவை ஆனா. VEINSன்ற ரத்தநாள நரம்புகள், இதயத்துக்கே ரத்தம் எடுத்துசெல்பவை. அப்போ அதையெல்லாம் எப்படி ஒருத்தரு பாதுகாக்கனுமுன்னு புரிஞ்சுக்குங்க.

இருதயத்தில் ரத்தக்குழாய் அடைப்பு BLOCK என்பதெல்லாம் இப்போ சர்வ சாதாரணமானக் குறைபாடா இருக்கு சார். அது மரண தண்டனை இல்லைன்றத புரிஞ்சுக்கணும்.

உங்கள் நடைமுறை வாழ்க்கையில் நீங்க மேற்கொள்ளக்கூடிய சில மாற்றங்களை Lifestyle changes சரியாக் கடைபிடிச்சா இந்த குறைபாட்டை முழுசுமே சரி செய்யலாம்.

சொன்னேனில்லையா... தமனின்றது உடல் முழுக்க இரத்தத்தக் கொண்டுப் போகிற குருதிப்பாதை. இந்தப் பாதைல கொழுப்பு அல்லது வேறு ஏதோ ஒன்னால அந்த தமனி சைஸ் குறுகி ரத்தப்பயணம் தடைபடறதத் தான் அடைப்புன்றோம். அப்படி இரத்தக் குழாய்ல அடைப்பு ஏற்படும்போது இதயத்தோட செயல்பாட்டில பிரச்சினை வருது... புரியுதுங்களா...”

“நல்லாவேப் புரியுதுங்க சார்... ஆனா LIFESTYLEந்னு சொன்னீங்களே அதக்கொஞ்சம் வெளக்க முடியுமா...?”

“பெருசா ஒன்னும் இல்ல சார்... உடல் எடையை குறைக்கிறது... மனப்பதட்டமோ மன அழுத்தமோ இல்லாம இருக்கிறது. போதுமான உடற்பயிற்சி... முக்கியமா நடைபயிற்சி... சரிவிகித சத்தான உணவுன்னு வாழ்ந்தாலேப் போதும். இவ்ளோ தான் நம்ம லைப் ஸ்டைல். இதுலத்தான் இருக்கு நம்ம நலம். உங்களுக்கு புரியும்னு நம்புறேன் “ ரத்தினவேல் சாரின் கண்ணாடியில் இருந்து இரண்டு ஆனந்த விழிகள் நம்பிக்கைத் தூவிப் புன்னகைத்தன.

‘வாழ நினைத்தால் வாழலாம் வழியாய் இல்லை பூமியில்’ சுசீலாம்மா ராஜேந்திரனின் செவி அருகே பாடினார்.

நோயல்ல இது இயற்கை தரும் எச்சரிக்கை. தோணும் போதெல்லாம் சாப்பிடாதேடா செல்லம். சரிவித உணவை சரியான நேரத்துக்கு சாப்பிடு... மன இறுக்கம் தவிர்... கோபம் குறை... மயிர் பிளக்கும் விவாதங்களில் மணித்துளிகளை கரைக்காதே... முக்கியமாய் முகநூல் குப்பையைக் குறை...! ஆழ்மனசுக்குக் கட்டளையிட்டான் ராஜேந்திரன்.

இந்த நாள் அவனைப் பொறுத்தவரை புதிய நாள். காலை 8 மணிக்கு ரத்தினவேல் எனும் நற்காற்று அறைக்குள் வந்தது.

“மிஸ்டர் ராஜேந்திரன் நேற்று எடுத்த டெஸ்ட் ரிப்போர்ட்ஸ் பார்த்தேன், ஹார்ட் டிஷ்யூஸ் உங்களுக்கு ரொம்ப வீக்கா இருக்கு. இப்போ பைபாஸ் சர்ஜரி செய்கிறது பேஷண்ட்டுக்கு உதவாது. பேஷண்டுக்கு பெனிஃபிட் இல்லாத எதையும் நாமேன் முயற்சிக்கனும். அதனால ஆபரேஷன் செய்யணுமா... மருந்து மாத்திரையிலேயே உங்க ஹார்ட் பிளாக்கை குணப்படுத்தலாமேன்னு என்று எங்க டாக்டர்ஸ் டீம் நம்புது. So...” ஷண நேர மவுனம். டாக்டரின் முகத்தையே பார்த்தான் ராஜேந்திரன்.

“So உங்களுக்கு இப்போதைக்கு ஆபரேஷன் பண்ணல... இன்னைக்கே டிஸ்சார்ஜ்-ம் செஞ்சுடுவோம் சரிதானே... ராஜேந்திரனுக்குள் பெரிய உணர்வுகள் ஏதும் எழவில்லை அறுவை சிகிச்சைக்கு தயாராகவே இருந்தவனுக்கு சற்று ஏமாற்றமாகவும் இருந்தது.

“நல்லது சார். நன்றி!”

புயல் வெளியேற செந்திலும், மீனாவும் கட்டை விரலை உயர்த்தி புன்னகைத்தனர்.

டிஸ்சார்ஜ் ஆனாலும் சார்ஜ் இருக்கே... மருத்துவமனை கட்டணங்களைச் செலுத்த தயாராகிக் கடனட்டையோடு வெளியேறினாள் மீனாட்சி.

மெல்லப்படுக்கையிலிருந்து எழுந்த ராஜேந்திரன் பயணத்துக்குத் தயாராக, சில நொடியில் உள் நுழைந்தார் மருத்துவர் மணிக்கண்ணன். உடன் தம்பி செந்தில் மட்டும்.

“குட்மார்னிங் மிஸ்டர் ராஜேந்திரன். டாக்டர் ரத்னவேல் டீடெயில்ஸ் சொல்லி இருப்பாரே. மெடிசின்ஸ் எழுதித் தரேன். பத்து நாள் கழிச்சி ரிவியூக்கு வாங்க”

“ஓகே சார்... ஏதும் கண்டிஷன் உண்டா...?”

“நிச்சயமா... நிறையவே இருக்கு. சொல்றேன்”

“டெய்லி முடிஞ்ச வரைக்கும் நடங்க... மெதுவாச் சீரான வேகத்தில் நடங்க... வாக்கிங் ஷூ யூஸ் பண்ணி நடக்கிறது நல்லது. நிறையத் தண்ணீர் குடிங்க... டயட் ஃபுட் கண்டிப்பாக மெயின்டன் பண்ணனும். நடக்கிறப்ப இன்னொருத்தரக் கம்பேர் பண்ணி நடக்காதீங்க... உங்களால முடிஞ்ச வரைக்கும் நடங்க... ஆயில் புட் குறைக்கணும்... எக் ஒயிட் மட்டும், குழம்பு மீனும், குழம்பு சிக்கனும் கொஞ்சமா சாப்பிடலாம். பழங்கள் சுண்டல் எடுத்துக்கலாம். சாப்பாட்டை மூன்று வேளைக்குப் பதிலா அஞ்சு வேளையா பிரிச்சு எடுத்துக்கறது நல்லது. கார்போஹைட்ரேட் குறைச்சு புரோட்டின், ஃபைபர் நிறைய எடுத்துக்கணும், கொலஸ்ட்ரால் அயிட்டம் கொறைக்கணும். செல விஷயமெல்லாம் கூடவே கூடாது. ஆல்கஹாலை மறந்துடுங்க... ஸ்மோக்கிங் ஹாபிட் இல்லை தான... நல்லது! எங்களோட மருந்துகளாலேயே உங்க இதய அடைப்பை கறச்சிடலாம்னு நம்புறோம். குட் லக் டேக் கேர்”

“தேங்க்யூ சோ மச் சார்... உங்களோட கைராசி தான் என்னோட உயிரை காப்பாத்திக் கொடுத்திருக்கு...!”

“ம்ம் அப்படியா...” என்று தம்பி செந்திலைப் பார்த்து விட்டு புன்னகைத்தபடி கிளம்பினார் டாக்டர் மணிக்கண்ணன்.

“கௌம்புவோமாண்ணா...?” தம்பி செந்திலின் பாசக்குரல்.

இழுவைப் பெட்டியை இழுத்துக் கொண்டவன், பைல் மற்றும் மருந்துப் பையை மீனாட்சியிடம் கொடுத்தான்.

“அண்ணா... வீல்ச்சேர் சொல்லட்டுமாண்ணா...?” மீனாட்சியின் குரலில் அக்கறைக் கூடிய நிஜமான பாசத்வனி.

“இல்லம்மா... வேணாம். மெதுவாக நடக்கிறேன்...”

வார்டில் இருந்த பணியாளர்களிடம் நன்றி சொல்லி, லிப்டில் இறங்கி தரைத்தளம் இறங்கினான்.

காரோடு காத்திருக்கிறான் செந்தில். அதே வாகனம்; அதே ஓட்டுநர்; அதே துணைவி மீனாட்சி.

மூணுநாளைக்கு முந்தி பகலில் உயிரைக் கையில் பிடித்தபடி பயணித்த ராஜேந்திரன் இப்பொழுது மருந்து மாத்திரைகளைக் கையில் பிடித்தபடி பயணிக்கிறான். ஆம் இன்றும் அவன் உயிரோடு நலமுடன் இருக்கிறான்.

மருத்துவமனையின் இடதுபுறம் திரும்பி கிண்டி செல்லும் சாலையில் பயணிக்கிறது வாகனம். மாலைச்சூரியன் பிரகாசமாய் ஒளிர்ந்தான். தாம்பரம்... கூடுவாஞ்ச்சேரியெல்லாம் எங்கள் காருக்குப் பின்னால்...

“டீ சாப்பிடலாமா”

செங்கல்பட்டு நகரம் தாண்டி சாலையோர தேநீர் விடுதியொன்றின் முன் நின்றது கார். அது தேநீர் விடுதி மட்டுமல்ல... சிறு உணவுகள், பேக்கரி வகைகள் என அது இதுவென பலவும் கிடைக்குமிடம்.

“உனக்கு சுண்டல் வாங்கிடவாண்ணா...?

“வேற என்ன இருக்கு...?”

“மொளகா பஜ்ஜி, முட்டை பஜ்ஜி சிக்கன் பக்கோடா...”

“மூணுத்திலேயும் ஒவ்வொரு பிளேட் சொல்லு... டேஸ்ட் பாத்துடுவோம்”

திடுக்கிட்டுத் திரும்பினாள் மீனாட்சி...!



# பிரிவின் மடல்

சிறுகவி மு. மாஜிதா

நீ அருகே இருந்தால் அனைத்தையும்
எதிர் கொள்ளத் துணிவுண்டு என்ற
காலம் போய் உன் பிரிவை
எதிர் கொள்ளும் காலம் வந்துவிட்டது...

என் விழிகளில் வழிந்த கண்ணீரைத் துடைத்த
அதே கைகள் தான் என் வாழ்விலிருந்து
நீங்கி விடு என்று கைகளை கூப்பியது...

உனக்காக நித்தமும் இருப்பேன்
என்று சத்தியம் செய்தாய்,
சத்தியங்களும் சத்தமுமின்றி
சங்கடப்பட்டுக் கொண்டிருக்கிறது...

கனவுகளை களவாட வேண்டிய நான்
என் நிஜங்களை களவாடிய உன்னை
என் நினைவுகளோடு
களமாடி கொண்டிருக்கிறேன்...

சிறுநொடி உன் பிரிவை
ஏற்றுக் கொள்ள முடியாத
இம்மனம் தான் நீ இல்லாத
வாழ்வை ஏற்றுக் கொண்டிருக்கிறது...

ஏனோ என் காதல் முகவரிக்கு
வழித்துணையாய் வந்தாய்
இப்போது விழித்துணைக்கு
கண்ணீரை தந்தாய்.



# வைராக்கியம்



மலர்மதி, சென்னை




முதியோர் இல்ல வளாகம்.

மாலை நேர தேநீர் அருந்திவிட்டு, ஒவ்வொருவராய் தங்களுக்கு நேர்ந்த அவமானங்களையும், முதியோர் இல்லத்தில் சேர்ந்த அல்லது சேர்க்கப்பட்ட சோகக் கதைகளையும் பகிர்ந்துக்கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு வந்த மீனாட்சி அம்மாள், "என்ன எல்லோரும் ஜாலியா இருக்கீங்க போலிருக்கு..." என்று கேட்டுக்கொண்டே அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தார்.

"சும்மா கடந்த கால நிகழ்வுகளை அசை போட்டுக்கொண்டிருக்கிறோம்." என்றார் சுப்பிரமணி.

"கல்நெஞ்சம் படைத்த பிள்ளைகள் தங்கள் சுயநலம் பற்றியே எண்ணுகிறார்களே தவிர, அவர்களைப் பெற்று, வளர்த்து, படிக்கவைத்து, திருமணம் முடித்து வைப்பதற்குள் பெற்றோர்கள் படும் பாட்டை கொஞ்சங்கூட நினைத்துப் பார்ப்பதில்லை." என கவலைப்பட்டார் மணிமேகலை.

இப்படி ஆளாளுக்கு குழந்தைகள் மீதான வெறுப்பை அள்ளிக் கொட்டினர்.

எல்லாவற்றையும் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த மீனாட்சி அம்மாள், "சரி, நான் ஒண்ணு கேக்கறேன். அதற்கு பதில் சொல்லுங்கள்..." என்றதும், அனைவருடைய பார்வையும் அவர் மேல் பதிந்தது.

"நாளைக்கு உங்க மகளோ, மகனோ வந்து உங்களை மீண்டும் அவர்களுடன் சேர்த்துக்கொள்ள அழைத்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?"

"கண்டிப்பா அவர்களோடு போகவே மாட்டோம்..." – கோரஸாக சொன்னார்கள்.

"ஏன்?"

"நேத்து வந்தவளோட பேச்சைக் கேட்டு முன்பின் யோசிக்காமல் எங்களை முதியோர் இல்லத்தில் தள்ளிவிட்டவன், நாளை வேறு ஏதாவது சின்ன விஷயத்துக்காக மீண்டும் எங்களை துரத்தியடிக்கமாட்டான்னு என்ன நிச்சயம்?" – ஆவேசமான வார்த்தைகள் வந்து விழுந்தன.

தெளிவு பெற்ற மீனாட்சி அம்மாள் ஒரு தீர்மானத்துக்கு வந்தாள்.

மறுநாள் நியூயார்க்கிலிருந்து மீண்டும் மகன் சபரீஷின் கால்.

"அம்மா... என்னம்மா முடிவு எடுத்திருக்கீங்க?"

"என்னால் மீண்டும் உன் மருமகளோடு சேர்ந்து வாழ முடியாதுப்பா. அதுமட்டுமில்லை... என்னை நம்பி இருக்கும் இருபது பேரை உதறிட்டு என்னால் வரமுடியாது."

உறுதியாக சொல்லிவிட்டு அலைபேசியை அணைத்தாள் அந்த முதியோர் இல்லத்தைத் தொடங்கி அதை நிர்வகித்துவரும் மீனாட்சி அம்மாள்.

# புதிய தொடக்கம்...

பாலமுருகன்.லோ



ராகவனுக்குத் திருமணமாகி சுமார் இருபது ஆண்டுகள் ஆகிவிட்டன, காலம் ஒரு நதியைப் போல சத்தமின்றி ஓடியிருந்தது. அவனும் அவனது மனைவி கீதா மற்றும் குழந்தைகள் நகரத்தில் வசித்து வந்தனர். ஒரு சிறிய நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்.

கணவனும், மனைவியும் வேலைக்குச் செல்லும் கட்டாயத்தில் தள்ளப்பட்டனர். இருவரும் அவரவர் வேலையில் மும்முரமாக இருந்த சமயம், இயந்திரம் போல் இருவரும் இயங்கத் தொடங்கினர். அவர்களுக்குள் இருந்த அன்பும், பாசமும் அந்த இயந்திர ஓட்டத்தில் தேய்மானம் கொண்டது போல மாயமாகத் தொடங்கியது. காலை உணவுக்குப் பின் வெளியே கிளம்பிய ராகவன் இரவுதான் வீடு திரும்பும் வழக்கமாக வைத்திருந்தான். இந்தச் செயல் ராகவனுடைய குற்றமில்லை. அவன் வேலைச் செய்கிற இடமானது சுமார் அவர்களது வீட்டிலிருந்து நாற்பது கிலோமீட்டர்த் தூரம்.

ஒரு நாளில் அவன் பெரும் பகுதியை நிறுவனத்திலும் மற்றும் நிறுவனத்தின் பேருந்திலும் தான் செலவழிப்பது வழக்கமாக இருந்தது. அவனது வாழ்வின் பெரும்பகுதி, பஸ் பயணங்களிலும், அலுவலகத்தின் நான்கு சுவர்களுக்குள்ளும் ஒரு மெழுகுவர்த்தியைப் போல உருகிக் கரைந்தது. குறைந்தது ராகவன் பதினாறு மணி நேரம் வீட்டை விட்டு வெளியே இருக்கும் சூழ்நிலை உருவானது. இதற்கு முக்கியக் காரணம் குடும்பச் சூழல், பிள்ளைகள் படிப்பு, நகர வாழ்வு இவையனைத்தும் தான். குழந்தைகள் வளரத் தொடங்கினர், இருவரும் இரட்டையர்கள். இரு குழந்தைகளும் இப்போது பள்ளிப் படிப்பை முடித்து, கல்லூரியில் கல்விப் பயிலத் தொடங்கினர்.

***

இருபது ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. ஆனால் ராகவனுக்கும், கீதாவுக்கும் அவ்வப்போது சண்டை வருவதுண்டு, இதனால் அவர்கள் மனதிலும் வேறுபாட்டை உணரத் துடங்கினர். சில சமயங்களில் சிறு பொறியாகத் தொடங்கும் வாக்குவாதங்கள், பெருங்காட்டுத் தீயெனப் பரவி, அவர்களின் மன அமைதியைக் கொளுத்திவிடும். சின்னச் சின்னச் சண்டை வந்து அதுவே பெரிய சண்டையாக மாறுவதும் உண்டு. ராகவனும் சரி கீதாவும் சரி எப்படியாவது இதற்கு ஒரு முற்றுப்புள்ளி இடவேண்டும் என்று தீவிரமாகப் பல சமயங்களில் யோசித்ததுண்டு.

ஆனால் அவர்களால் அதைச் செயல்படுத்த முடியவில்லை. இதற்கு முக்கியக் காரணம் சரிவரப் புரிதல் இல்லாததே. எங்கே போகிறது இந்தப் புரிதல்? ஆரம்பக் காலத்திலிருக்கும் இந்தப் புரிதல் ஏன் சில வருடங்கள் கழிந்தப் பின் காணமுடியவில்லை? சாம்பல் பூத்த நெருப்புக் கங்குகளைப் போல, ஆழ் மனதில் இருவருக்கும் அன்பு, பாசம், நேசமெல்லாம் இருக்கிறது. ஆனால் அதைவெளியே காட்ட இருவரும் முன் வரவில்லை. இருவருக்கும் நன்றாகவே தெரியும் இப்படி அடிக்கடி சண்டையிட்டுக் கொண்டால்; பிள்ளைகளின் மனதில் இவ்வகைச் சண்டையானது பசுமரத்து ஆணியைப் போல் அப்படியே பதிந்துவிடும் என்று. ஆனாலும் அவர்களால் அதைக் கட்டுப்படுத்த முடியவில்லை. சில சமயங்களில் இருவரும் பிரிந்து விடலாம் என்று நினைப்பர். ஆனால் அவர்களது பிள்ளைகளின் முகம்தான் அவர்கள் கண் முன் வந்து செல்லும். இதன் காரணமாக அவர்கள் அந்த விபரீத முடிவை எடுக்க வில்லை. மாறாக இருவரும் சகிப்புத்தன்மையை வரவழைத்துக் கொண்டு காலத்தை நடத்தினர்.

சில சமயம் ராகவன் தனிமையில் இருக்கும் போது ஏன் கீதாவுக்கு ஒரு கடிதம் எழுதக் கூடாது என்று நினைத்து, ஒரு நாள் அவன் கடிதத்தையும் எழுதினான்.

***

அன்பு கீதாவுக்கு,

ராகவன் எழுதிக் கொள்வது என்னவென்றால்? சுமார் இருபது ஆண்டுகள் உருண்டோடி விட்டன. இந்தத் தருணத்தில் கடிதமா என்று யோசிக்கையில் சற்று வேடிக்கையாகத் தான் இருக்கும். ஆனால் அதுவே உண்மையும் கூட. ஆம் இதுவே முதல் முறை மனதில் இருப்பதை வெள்ளைக் காகிதத்தில் நிரப்பியுள்ளேன். மனதில் தேங்கிக் கிடந்த வலிகளை எல்லாம் அந்த வெள்ளைக் காகிதமானது ஒரு மௌன சாட்சியைப் போல வாங்கிக் கொண்டது. படிக்கும் போது விந்தையாகத்தான் இருக்கக் கூடும்.

ஆழ்ந்துச் சிந்தித்த பிறகு மற்றும் அதிகம் யோசித்த பிறகே; இங்கு நான் இதைப் பதிவு செய்கிறேன். சில காலங்களாகவே நம் இருவருக்கிடையே இருந்து வரும் கருத்து வேறுபாடு அதிகமாகிக் கொண்டே போகிறது. அந்த அன்யோன்யம் (பரஸ்பரம்) எங்கோ காணவில்லை. இப்போது நினைத்தாலும் வினோதமாக உள்ளது.



இதற்குக் காரணம் இருவருமாகக் கூட இருக்கலாம். எப்படிச் சரிசெய்து கொள்வது என்று யோசித்து, பல முறை பன்மடங்கு நடவடிக்கைகள் எடுத்தாகிவிட்டது. ஆனால் அவையனைத்தும் ஏனோ வீணாகிப்போய்விட்டன. நீயாக இருக்க முயற்சி செய்து வருகிறாய்; அதில் உனக்குக் கூடிய விரைவில் வெற்றிக் கிட்ட வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

இங்கு இதை மட்டும் பதிவு செய்ய விரும்புகிறேன். ஆயிரக்கணக்கில் சம்பாதிக்கும் போதிருந்த சந்தோசம் இப்போது அதைவிடப் பல மடங்குச் சம்பாதிக்கும் போது இல்லை.

என்னுடைய அன்பு திரைத்துறையில் வருவது போல் இருக்காது. எனக்கு எப்படி அதை வெளிப்படுத்த தோன்றுகிறதோ அதை அப்படியே வெளிப்படுத்துவது தான் என் வழக்கம். எப்படி உன்னை எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் ஏற்றுக் கொண்டேனோ! அப்படித்தான் இன்றும் உள்ளேன். பாசத்தை எதிர்பார்த்துத் தோற்றும் போன ஒரு நபராகவே இருந்துவிட்டுப் போகிறேன்.

இப்பொழுது, பெருந்தொற்றுக் காலமாக இருப்பதால் நான் இதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒருவேளை மறுபடியும் நான் இந்தப் பெருந்தொற்றில் சிக்கிக்கொண்டால் என்னை அப்படியை விட்டுவிட்டு பிள்ளைகளின் மேல் கவனத்தைச் செலுத்து. பிள்ளைகளை நீ தான் பார்த்துக்கொள்ள வேண்டும். வரும் காலங்களில் இதைத் தொடர்ந்து செய்வாயாக. இனியிருக்கும் காலங்களில் என்னாலான உதவிகளை நான் செய்வேன்.

ஒரு வேளை நான் மரணமடைந்தால். நீ தான் இந்த அசையும் சொத்து, அசையாச் சொத்து, LIC மற்றும் eNPS மூலம் வரும் பணத்தைவைத்துப் பிள்ளைகளைப் பார்த்துக்கொள்ள வேண்டும். என் மனதில் தோன்றியதை எழுதியாகிவிட்டது. மனதில் வலியை வைத்துக் கொண்டு; வெளியில் வேறுவிதமாக இருக்க முடியவில்லை. இனி வரும் காலங்கள் எப்படி நகரப் போகிறதோ அதை அப்படியே ஏற்றுக் கொள்ளப் பழகிக்கொள்ள வேண்டும்.

இப்படிக்கு உன் ராகவன்...

***

இந்தக் கடிதத்தை எழுதினானே தவிர, அவன் கீதாவிடம் கொடுக்காமல் அவனே வைத்துக்கொண்டான். அவன் மேலே கடிதத்தில் கூறியது போல வாழ்க்கையை அதன் போக்கில் விட்டு அதன் பின் ஓட ஆரம்பித்தான்.

இப்படிதான் ஒரு நாள் எதற்கோ ஆரம்பித்து எங்கேயோ போய் முடிந்தது. இருவரும் கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்த சமயம். கட்டுப்பாட்டை இழந்த கோபம், ஒரு புயலைப் போல இருவரையும் சுழன்றடித்தது. வாய்ச் சண்டையானது கைகலப்பாக மாறி விட்டது. இருவரும் அடித்துக் கொண்டனர், நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே ராகவன் மேசையில் இருந்த கண்ணாடித் தண்ணீர்க் கூஜாவைக் கீழே போட்டு உடைத்தான். அது தரையில் விழுந்து நொறுங்கிய சத்தம், அவர்களின் இல்லறத்தின் மகிழ்ச்சி நொறுங்கியதன் ஓசையாகவே ஒலித்தது. கண்ணாடிக் கூஜாவானது தரையில் விழுந்து அதிலிருந்து சிதறியக் கூரிய துகள், ஒரு விஷ அம்பைப் போல கீதாவின் கண்களில் பாய்ந்து அவளது பார்வை இழக்க நேர்ந்தது.



ராகவன் இப்போது எண்ணிப் பார்க்கிறான் நாம் சற்று அவசரப் படாமலிருந்திருந்தால் கீதா பார்வையை இழந்திருக்க மாட்டாள். அந்த ஒரு நொடி கோபம், இப்போது யுகங்கள் தாண்டியும் தீராத ஒரு பெரும் சுமையாக அவன் மனதை அழுத்திக் கொண்டிருந்தது. ஒரு சிறிய தவற்றால் பாதிப்பு அவளை மட்டும் வந்து சேரவில்லை, குடும்பத்தை முழுவதுமாகப் பாதித்தது. ராகவன் இதை நினைத்து வருத்தப்படுவதும், பிள்ளைகள் மற்றும் கீதாவும் ராகவனைச் சமாதானம் செய்வதுமாக இருந்தார்கள்.

ராகவன் சிந்திக்கத் தொடங்கினான். ஒவ்வொருவரும் அவரவரிடம் இருக்கும் இறுமாப்பை (ஈகோவை) அகற்றிவிட்டு மறுபடியும் பழையபடி ஒன்றிணைந்து வாழ முற்பட்டால் வாழ்வும் சிறக்கும் மற்றும் அவர்களது மண வாழ்க்கையில் மகிழ்ச்சித் தவிர வேறொன்றும் இருக்காது. இந்த நிகழ்வுக்குப் பிறகு ராகவன் புதியதொரு இலக்கை நோக்கி ஓட முற்பட்டான் தன் குடும்பத்திற்காக. ராகவன் அவனுடைய இரண்டு கண்களிலிருந்து ஒரு கண்ணை அவனது மனைவிக்குக் கொடுத்து, தன் வாழ்வின் ஒளியில் ஒரு பாதியை அவளுக்குத் தந்து, அவளது இருண்ட உலகில் மீண்டும் வெளிச்சத்தைப் பற்றவைத்தான். இனியாவது நாம் இருவரும் சண்டையிடாமல் சமாதானமாக வாழ்வது என்று முடிவெடுத்து வாழ முற்பட்டான்.

அந்தத் துயர நெருப்பில் புடம்போட்ட தங்கமாக அவர்களின் உறவு பிரகாசிக்கத் தொடங்கியது. ஒரு புதிய தொடக்கத்தை மேற்கொண்டனர் இருவரும். இருவரும் இப்போது எண்ணிப் பார்ப்பதுண்டு, நாம் அன்று சரியான முடிவுதான் எடுத்தோம். மாறாக அன்று இருவரும் விவாகரத்துக்குச் சென்றிருந்தால்! இப்போது பிள்ளைகளின் கதி என்னவாக இருக்கும் என்று அவர்களுக்குள்ளேயே மனதில் எண்ணிக் கொண்டனர். ராகவன் மேலும் ஒன்றை சிந்தித்தான். நல்ல வேளை நாம் எழுதிய கடிதத்தைக் கீதாவிடம் கொடுக்கவில்லை. மீறிக் கொடுத்திருந்தால் அவளது மனது எப்படிப் பாடுபட்டிருக்கும் என்று அவனது ஆழ் மனதில் எண்ணி தனக்குள்ளேயே அந்த நிகழ்வை மறைக்கவும் செய்தான். பிள்ளைகளும் ராகவனுக்கு உறுதுணையாக இருந்தனர். அவனிடமிருந்த அந்த முன்கோபம், இறுமாப்பு எல்லாம் அந்தத் துயர நெருப்பில் சாம்பலாகிப் போயிருந்தன.

# ‘இம்மைத் துறக்கம் எழில் மிகு துபை’

**பரிவை சே.குமார்.**



**கே**லக்ஸி பதிப்பகம் கடந்த மூன்றாண்டுகளாகப் பதிப்புத்துறையில் தொடர்ந்து சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதற்கு அக்டோபர் 4-ஆம் தேதி மாலை துபை 'Time Grand Plaza Hotel'-ல் நடைபெற்ற 70-வது புத்தக வெளியீடே சாட்சி.

ஆம்... கேலக்ஸி பதிப்பகம் வெளியீடான, ஐயா 'காப்பியக்கோ' ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்களின் 'இம்மைத் துறக்கம் எழில் மிகு துபை' நூல் வெளியீட்டு விழா நிகழ்வு மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மூன்று வருடங்களுக்கு முன் கேலக்ஸியின் தொடக்க நிகழ்வில் முதல் புத்தகமாய் காப்பியக்கோ ஐயா அவர்களின் 'மைவண்ணன் இராம காவியம்' என்னும் நூல் வெளியிடப்பட்டது. தற்போது வெளியான 70-வது நூலும் ஐயாவின் நூலாய் அமைந்தது மிகச் சிறப்பு. அதுவும் இலங்கையின் மிகச் சிறந்த எழுத்தாளர் என்பது மட்டுமில்லாமல் தமிழகத்துடன் மிகுந்த நெருக்கம் கொண்ட, உலகளவில் அறியப்பட்ட ஒரு எழுத்தாளரின் நூலை கேலக்ஸி தொடர்ந்து வெளியிடுவது பெருமையும்... மகிழ்வும்.

மிகச் சிறப்பான மனிதரின் புத்தகத்தை, அமீரகத்தில் தொழில் முனைவோர்களாக, பலருக்கு உதாரணமாக, பலரால் போற்றப்படும் மிகச் சிறந்த மனிதர்கள் வந்திருந்து புத்தகத்தை வெளியிட்டுப் பேசியது சிறப்பு.

நிகழ்வில் காப்பியக்கோ அவர்களின் குறும்படம் ஒன்று பகிர்ந்து கொள்ளப்பட்டது. ஐயாவின் சிறுவயது முதல் இப்போது வரையிலான தொகுப்பு. குறிப்பாக இடையிடையே ஏ.ஐ மூலமாக ஐயாவைக் காட்டியது சிறப்பு. இந்த குறும்படத்தைத் தயாரித்த கலைஞன் நாஷ் மிகச் சிறப்பாகச் செய்திருந்தார்.





AL Reem Company LLC' நிறுவனத்தின் அபுதாஹிர் அவர்கள் வரவேற்க, ஜெசிலா மேடம் நூலறிமுகம் செய்தார். ஈமான் கலாச்சார மையத்தின் தலைவர் ஹபிபுல்லாஹ் கான், அறிவியல் அறிஞர் வெள்ளம்ஜி இக்பால், ஈமான் அமைப்பின் பொதுச் செயலாளர் ஹமீது யாசின், முத்தமிழ் சங்கத் தலைவர் ஷா, தொழிலதிபர் ஜாஹிர் ஹுசைன், மக்ரூப், பாலா, கமால், நஜீம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள். ஐயா குறித்தும் அவரின் காவியங்கள் குறித்தும், தமிழ் மீதான காதல் குறித்தும் பேசினார்கள்.

காப்பியக்கோ அவர்கள் தனது ஏற்புரையில் 'பல காவியங்களை இயற்றியிருக்கிறார். எல்லாக் காவியத்திலும் பாட்டுடைத் தலைவனாக ஒருவன் வருவான். இந்தத் துபை என்ற நூலின் பாட்டுடைத் தலைவனாக இருப்பது துபை என்ற நாடுதான் என அபுதாஹிர் அவர்கள் தனது வாழ்த்துரையில் சொல்லியிருப்பதாய் சொன்னார்.



மேலும் நான் எதற்காகத் துபை குறித்து காவியம் எழுதினேன் என்றால் நான் பல நாடுகளுக்குப் போயிருக்கிறேன் என்றாலும் மற்ற நாடுகளில் காணாத ஒன்றை இந்த நாட்டில் கண்டேன். அதுதான் இந்த நாட்டின் வளர்ச்சி என்று சொன்னார். மேலும் இந்தப் புத்தகத்துக்கு பாலாஜி அவர்கள் பிழை திருத்திய விதம் என்பதைச் சிரிக்கச் சிரிக்கச் சொல்லி, இந்தப் புத்தகத்தில் ஒரு எழுத்துப்பிழை கூட இருக்காது என்ற உறுதியையும் வழங்கினார்.

மிகச் சிறப்பான இரவு உணவும், நண்பர்களின் அளவளாவல் என மிகச் சிறப்பானதொரு நிகழ்வாக இந்தப் புத்தக வெளியீடு நடந்து முடிந்ததில் அத்தனை பேருக்கும் மகிழ்ச்சி.

இலக்கிய, இலக்கணத்தில் ஐயா ஒரு பெரும் கடல். நானெல்லாம் கரையில் இருந்து அதை ரசிப்பவனாய் மட்டுமே. இந்த வயதிலும் அவர் தீவிரமாய் எழுதுவதைப் பார்க்கும் போது மகிழ்வாகவும், ஆச்சர்யமாகவும் நாமெல்லாம் அப்படி ஒன்றும் எழுதிவிடவில்லை என்ற எண்ணமும் ஒரு சேர மனதுக்குள்.

ஐயா இன்னும் தொடர்ந்து பல காப்பியங்கள் எழுத வேண்டும். எங்களின் கேலக்ஸி அவற்றைத் தொடர்ந்து வெளியிட வேண்டும் என்பதே எங்களின் ஆசை.

இந்த மிகச் சிறப்பான நிகழ்வின் அனைத்து வீடியோக்களும் எங்களது யூடியுப் சேனலில் இருக்கிறது பார்த்து உங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

நன்றி.

# இன்னொரு சாவி





தயாஜி, மலேசியா

குமாருக்கு பதட்டமாகிவிட்டது. இரு பாக்கெட்டிலும் கைகளைவிட்டு அலசு அலசென அலசினார். எந்தக் கையிலும் சாவி சிக்கவில்லை. காருக்குள்தான் அவரது கைப்பேசியும் இருப்பதாக சத்தமாக புலப்பினார். சுற்றிலும் பார்த்தார். யாரும் கண்டுகொள்ளவில்லை. அவர்கள் அவரவர் வேலையைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

இவர்கள் எப்போதும் இப்படித்தானே. யாருக்கு என்ன சிக்கல் என்றாலும் தங்களை பாதிக்காதவரை அவர்களும் அதனை சட்டை செய்வதில்லை. சில சமயங்களில் அது அவர்களை பாதித்தாலுமே அவர்களுக்கு அது தெரிவதுமில்லை. பழகிவிட்டது.

குமார் தன் பலம் கொண்டு கண்ணாடியைக் கீழிறக்கி பார்க்கிறார். கைகள் வழுக்கி கீழே வருகிறதே தவிர கண்ணாடி கொஞ்சமும் இறங்கி வரவில்லை. இவ்வளவு இழுத்தும் கீழே இறங்கி வராத காரின் கண்ணாடி; அவருக்கு வேறு யாரையோ நினைக்க வைத்திருக்கும் போல. அந்த நபரை சத்தமாக திட்டினார். அது அங்குள்ள ஒருவரின் காதில் விழுந்திருக்க வேண்டும்.

இதுவரையில் இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த அவருக்கு, உதவி செய்யும் எண்ணம் ஏற்பட்டது. அருகில் வந்து "என்ன ஆச்சி...?" என விசாரிக்கிறார்.

குமாருக்கு 'ஹப்பாடா...' என இருந்தது. சுமார் ஒரு மணி நேரமாக இந்தக் காரை திறக்க முயன்று கொண்டிருப்பதாக சொல்லி சாவியையும் கைப்பேசியையும் உள்ளே வைத்துவிட்டேன் என சொல்லிவிட்டு இதுவரை செய்த காரியத்தின் விளைவாக வழியும் வியர்வையைத் துடைத்துக் கொண்டார். ரொம்பவும் சோர்வாகிப்போனார்.

வந்திருந்தவர், "ஓ... அப்படியா... இந்த ஹோண்டா கார்ல இதுவொரு பிரச்சனைதான்... மறந்தாப்ல சாவியை உள்ள வச்சிட்டா... அது பாட்டுக்கு லாக் ஆகிடும்..."

"அதைச் சொல்லுங்க... இப்ப பாருங்க என் நிலமையை... நான் வேற அவசரமாக போகனும்... என்ன பண்றதோ தெரியல..."

"இந்த ஹொண்டா காரைப் பத்தி தெரிஞ்சதாலதான் நான் இன்னொரு சாவியை என்னோட பேக்லயே வச்சிருப்பேன்... தோ பாருங்க..."

என்றவர் தன் லெப்டப் பையில் இருந்து ஒரு சாவியை எடுத்து அதன் பட்டணை அழுத்தினார். அந்த ஹொண்டா கார் 'பிப்...பிப்...' என்ற சத்தத்துடன் திறந்தது.

"சரி உள்ளே போய் உங்க பொருளை எடுத்துக்கோங்க... நானும் வீட்டுக்கு போகனும்..." எனச் சொல்லி கதவை திறந்துவிட்டு திரும்பி பார்க்கிறார்.

குமாரைக் காணவில்லை. மாட்டியிருந்தால் என்னவோ ஆகியிருப்பார். இவ்வளவு நிதானமான காருக்கு சொந்தக்காரரை குமார் இதுவரை சந்தித்தது இல்லை.

உதவ வந்தவர் சட்டென ஹொன்டாவில் அமர்ந்து கிளம்பவும் தூரத்தில் ஒருவர் தன் ஹொண்டா கார் திருடுபோவதைப் பார்த்து பதறியடித்துக் கொண்டு வரவும் சரியாக இருக்கிறது.

# வேலியண்ட் இளையராஜா

## சிம்ஃபொனி நம்பர்-1

பாலாஜி பாஸ்கரன்





இசைஞானியின் சிம்ஃபொனியை நேரில் கேட்க வேண்டும். அந்த நாளை வாழ்நாளெல்லாம் நினைந்துருக வேண்டும் என்ற எனது நீண்டநாள் கனவு நிறைவேறியது. ஆம், அக்டோபர் 18ம் தேதி சனிக்கிழமை துபாய் ஓபராவில் யுஏஇ ஃபில்ஹார்மோனிக் இசைக்குழுவினரால் இசைஞானியின் வேலியண்ட் சிம்ஃபொனி நிகழ்ச்சி நடத்தப்பட்டது. அரங்கு நிறைந்த ரசிகர் கூட்டத்தில் நானும் ஒருவனாக அந்த இசைவெள்ளத்தில் கரைந்து போனேன்.

அந்த இசையின் அதிர்வு என்னை விட்டு நீங்க நெடுநேரம் ஆனது என்பதே உண்மை. நான்கு பகுதிகளாக வாசித்துக் காட்டப்பட்ட சிம்ஃபொனி என்னுள் நிகழ்த்திய மாயம் சொற்களில் அடங்காது. பெரியவர் மேடையில் முதல் அடி எடுத்து வைத்ததும் எழுந்து நின்ற மக்களின் கைதட்டல்கள் அடங்க நேரம் பிடித்தது. இருக்க இருக்க சிறு குழந்தையாகிக் கொண்டே போகிறார் இசைஞானி. நடை, சிரிப்பு, பேச்சு எல்லாம் அவரைக் கட்டித் தூக்கிக் கொஞ்ச வேண்டும் போல இருக்கிறது. எப்பேர்ப்பட்ட இசை, என்ன ஒரு அருமையான கலைஞர்களைக் கொண்டு சிம்ஃபொனி வாசிக்கப்பட்டது தெரியுமா?

கலைஞர்கள் ஒருவருக்கொருவர் தங்கள் இசையால் பேசுகிறார்கள். மிகத் துல்லியமான நகர்வுகள். பல வயலின்கள் இருக்கிறதென்றால் அனைவரின் கைகளும் ஒரே அசைவு. ஒவ்வொரு இசைக்கருவியின் பின்னாலும் அந்தக் கலைஞர்களின் செய்கை ஒரு அழகிய நடனத்தைப் பார்ப்பது போன்றே இருந்தது. கூட்டத்தையோ அவர்கள் வாசிக்கும் கருவியையோ அவர்கள் கண்கள் பார்க்கவில்லை. எழுதப்பட்டு முன்னால் வைக்கப்பட்டிருக்கும் அந்தக் இசைக்குறிப்பை விட்டு அவர்கள் கண்கள் அகலவில்லை.

குறிப்பாக அந்த இசைக்குறிப்புத் தாளின் அடுத்த பக்கத்தை திருப்பவதற்கு ஒரே நேரத்தில் அந்தக் கலைஞர்கள் முன்னே வந்து கையை நீட்டி தாளைத் திருப்புவது நான் கண்ட அழகியல் நிகழ்வுகளில் ஒன்று. அத்தனை நேர்த்தி அவரவர்களின் ஒவ்வொரு அசைவிலும். ஒவ்வொரு முறை கைதட்டல்கள் எழும்போதும் பாராட்டை ஏற்கும் வண்ணம் அனைவரும் எழுந்து நின்று அதை ஏற்றுக் கொண்டனர். இசை இன்பத்தின் இரண்டாம் பகுதி முடிந்து மூன்றாம் பகுதிக்குள் நுழைந்ததும் உடல் முழுவதும் இசையால் நிரம்பிவிட்டார் இசைஞானி. நான்காம் பகுதி முடிந்தபிறகு மக்களின் கைதட்டல்களெல்லாம் கொஞ்சம் தொலைவாகவே எனக்குக் கேட்டன. “என்ன செஞ்சு வச்சார் இந்த மனுசன்? இப்ப என்ன ஆகிட்டிருக்கு?” என்றுணர்ந்து, மீண்டும் சமநிலைக்கு வரவே சற்றும் காலம் தேவைப்பட்டது.

சிறிய இடைவேளைக்குப் பிறகு நம் திரைப்படங்களிலிலிருந்து சில பாடல்களின் இசையை வாசித்துக் காட்டினார்கள், அதற்கு ரசிகர்கள் காட்டிய ஆரவாரம் இசைக்குழுவினரைக் கொஞ்சம் அசைத்துப் பார்த்தது என்றே சொல்லலாம்.

மைக்கெல் டாம்ஸ் சிம்ஃபொனி நடத்துநர், கிடைக்கும் இடைவேளைகளிலெல்லாம் நமது ஞானியை வியந்து புகழ தவறவிடவேயில்லை. மய்ஸ்ட்ரோ இளையராஜா மய்ஸ்ட்ரோ இளையராஜா என்று பெரியவரைப் பற்றி வியந்து பேசிக்கொண்டிருந்தார். அவரைத் தனியாகப் பேட்டி எடுத்தால் இன்னும் நுணுக்கமான விசயங்களை நாம் தெரிந்து கொள்ள முடியும். முன்பு எஸ்பிபி நமக்குச் சொன்னதை இவரும் உறுதி செய்தார். மய்ஸ்ட்ரோ சிறந்த இசையமைப்பாளர் மட்டுமல்ல, அவர் ஆகச்சிறந்த இன்ஸ்ட்ருமெண்டலிஸ்ட்டும் கூட; அவருக்குத் தெரியும் எந்தக் கருவியில் இருந்து எந்த இசை எந்த ஒலி அளவில் கேட்டால் நன்றாக இருக்கும், அதை எப்படி கொண்டு வரலாம் என அனைத்தும் அறிந்தவர் இளையராஜா என்பதை உறுதிபடக் கூறினார்.



அதன்பின்பு மேடைக்கு வந்தார் பெரியவர். ஃப்ரான்ஸ் ஷுபெர்ட்டின் அன்ஃபினிஷ்ட் சிம்ஃபொனி எழுதப்பட்ட ஆண்டு கிட்டத்தட்ட இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு; அதாவது 1828 ஆம் அக்டோபர் மாதம்; இன்று 2025 அதே அக்டோபர் மாதம் அந்த சிம்ஃபொனியை துபாயில் வாசித்து அதோடு நம் பாடலை கலந்து நானே பாடப்போகிறேன் என்று இசைஞானி சொன்னதும் பெரும் ஆரவாரம். அதே போல சிம்ஃபொனி கலைஞர்கள் வாசிக்க “இதயம் போகுதே எனையே பிரிந்தே” என பெரியவர் பாடவும் என் கண்களில் இருந்து தாரை தாரையாய் கண்ணீர் பெருகியதைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அந்த அனுபவத்தை நேரில் உணரும் போதுதான் இந்த எழுத்தின் உண்மை புரியும்.

இந்த அனுபவம் மற்றவர்களுக்கு புதிதாகவோ, பெரிதாகவோ கூட இருக்கலாம், ஆனால் தமிழர்களுக்கு, இசைஞானியின் ரசிகர்களுக்கு மிகவும் நெருக்கமான பழக்கமான ஒன்றாக இருக்கும். ஏனெனில் ஐம்பது ஆண்டுகளாக தமிழர்களை சிம்ஃபொனி இசைக்கு பழக்கி வந்திருக்கிறார் இசைஞானி என்பதை துபாய் சிம்ஃபொனி நிகழ்வில் கண்டேன். இந்த இசை நிகழ்ச்சி கேட்டுக் கொண்டிருந்த போதும் சரி கேட்டு முடித்த போதும் சரி, இத்தனை ஆண்டுகளாக நாம் கேட்ட பல பாடல்களில் பெரும்பாலானவற்றை சிம்ஃபொனியாகத்தான் இந்த மனிதர் நமக்குத் தந்திருக்கிறார் என்றுணர முடிந்தது.



நண்பர்களே, உங்கள் எல்லாருக்கும் தெரிந்ததுதான். இருந்தாலும் சொல்கிறேன். இந்த இசையை முதலில் அந்தந்தக் கருவியில் வாசித்துப் பார்த்து, ஒவ்வொரு கருவியாகச் சோதித்து சோதித்து இசை கேட்டு உருவாக்கப்பட்டதல்ல. ஒரு மனிதன், அந்த ஞானி தன் கற்பனையில் கருவாக்கி, இசைக்குறிப்புக் காகிதத்தில் தன் கைப்பட எழுதி அதை அப்படியே இசைக் கலைஞர்கள் தங்களுடைய கருவிகளில் வாசிக்கும் போது இப்படி இசை இன்பம் நமக்கு கிடைக்கிறது என்றால் அது எப்பேர்ப்பட்ட படைப்பாக இருக்கும். அவர் எப்பேர்ப்பட்ட படைப்பாளியாக இருப்பார்.

நம் ஊரின் ஒரு கிராமத்தில் இருந்து தன்னுடைய உழைப்பால் அறிவால் இசை ஞானத்தால் இனி இந்தியத் திரையிசையில் யாரும் தொடமுடியாத பல சாதனைகளைப் படைத்துவிட்டு, மேற்குலகம் தங்களுடைய வெஸ்டர்ன் கிளாஸிக்கல் இசையில் சிம்ஃபொனியின் இலக்கணமாக வகுத்து வைத்த அத்தனைக்கும் உட்பட்டு இத்தகைய மாபெரும் சாதனையைப் படைத்திருக்கும் இசைஞானி நாம் எப்போதும் கொண்டாட வேண்டும். இசை போற்றுவோம். இசைஞானி போற்றுவோம். நம்மில் ஒருவர் உலக இசையின் உச்சத்தை போய்த் தொட்டுவிட்டு அவர்களால் பியாண்ட் பெர்ஃபெக்சன் என்று வாழ்த்தும் வாங்கி வந்திருக்கிறார். அவர் காலத்தில் நான் வாழ்வதும் அவர் இசையைக் கேட்டு வளர்வதும் என் வாழ்நாள் பெருமையாகக் கருதுகிறேன்.

இரண்டு நாட்கள் கழித்து இந்தப் பதிவை எழுதிக் கொண்டிருக்கும் போது இசைஞானியின் காணொளி ஒன்று வந்தது. அதில் தீபாவளி வாழ்த்துச் செய்தியோடு இன்னொரு புதிய சிம்ஃபொனியும், அத்துடன் புதிய படைப்பாக சிம்ஃபொனிக் டான்சர்ஸ் என்ற புதிய இசைக் கோர்வையையும் எழுத இருக்கிறேன் என்று அறிவித்திருக்கிறார். மகிழ்ச்சி பெரியவரே.

ஓர் ஒப்பற்ற கலைஞன். எவராலும் நெருங்க முடியாத சாதனைகளை தமதாக்கி நம்மையெல்லாம் பெருமைப்படுத்தும் இசைஞானிக்கு வாழ்த்துகளை அவர் பாதம் தொட்டுத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்க இசைஞானி; வாழ்க அவர் புகழ்.

# கறி விருந்து



கார்த்திகேயன் மாதயன்



ஒரு ஊர்ல மாணிக்கம்ன்னு ஒருத்தரு இருந்தாரு...

அவர் கோழிக்கறி வெட்டும் கடை வச்சுருந்தாரு...

அவருடன் மனைவி, மற்றும் ஆறு வயது மகளும் வாழ்ந்து வந்தாங்க.

மாணிக்கம் வார வாரம் சந்தைக்கு போவது வழக்கம். அப்படி போய் வரும்போது ரெண்டு முயல் குட்டிங்கள தூக்கி வந்து வீட்டில வச்சிருந்தாரு.

பள்ளி முடிஞ்சு வீடு திரும்பிய மகள் ஸ்ரீதேவி அந்த முயல் குட்டிகள பார்த்ததும் மகிழ்ச்சியில் துள்ளி குதிச்சா. எப்போ பள்ளி முடிஞ்சு வீடு திரும்பினாலும் அந்த முயல் குட்டிகளிடம் விளையாடிகிட்டே இருந்தா...

மாணிக்கம் காலையில தொழிலுக்கு போனா சாயந்திரம் தான் வீடு திரும்புவாரு. மாணிக்கம் மனைவிக்கு வீட்டு வேலையே சரியாக இருந்தது.

இப்படி இருக்கையில...

ஒரு நாள் மாணிக்கத்தின் மச்சான் (மனைவியின் அண்ணன்) வீட்டிற்கு வந்திருந்தாரு. தனது அண்ணனுக்காக முயல் கறி செய்து தருமாறு கணவனிடம் கேட்டுக்க்கிட்டா மனைவி. மனைவியின் விருப்பப்படியே வீட்டில் உள்ள அந்த முயல்களை கறியாக்கி அவளிடம் கொடுக்க, அவள் அதை ஆசையாக சமைத்து தனது அண்ணனுக்கு பரிமாறினாள்.

மாணிக்கத்தின் மச்சான் அதை ருசித்து சாப்பிட்டு முடிக்க... மாலை அவரை வழியனுப்ப சென்றார் மாணிக்கம்.

வழக்கம்போல பள்ளியில இருந்து திரும்பி வந்த ஸ்ரீதேவி முயல் கூண்டில் சென்று பார்த்த போது அங்கே முயல்கள் இல்லாமல் அதிர்ச்சியடைந்தாள்.

தனது அம்மாவிடம் வந்து அதை பற்றி கேட்க, உன் மாமா ஊர்ல இருந்து வந்ததால அவருக்கு அதை சமைச்சு கொடுத்துட்டேன்மா என்று சொன்னாள்.

அதைக் கேட்டு ஓ என்று அழுதாள். அந்தக் கூண்டை பார்த்து பார்த்து அழுது கொண்டே இருந்தாள்.

மாணிக்கம் வீடு திரும்பினார்.

நடந்த விஷயத்தை மனைவி கூற, மாணிக்கம் மகளிடம் வந்து "இங்க பாருமா ஸ்ரீதேவி நீ சின்ன பொண்ணு தான் இருந்தாலும் உன்கிட்ட இந்த விஷயத்தை சொல்றேன். ஏதோ ஒரு ஆசையில நாங்க தெரியாம செஞ்சி இருந்தாலும் இது எல்லாம் கர்மா உடைய செயல். எந்த ஒரு உயிர் யார் மூலமாக பிரியுதோ அந்த உயிரோட அத்தனை பாவ புண்ணியங்களையும் அவங்க ஏத்துகிட்டதுக்கு சமம்... இது எல்லா உயிருங்களுக்கும் பொருந்தும். சொர்க்கம் நரகம் பாவம் புண்ணியம் இதெல்லாம் நாம வாழும் காலத்திலேயே கழியுது. எப்போ ஒரு உயிர் உடலை விட்டு பிரியுதோ அப்போதான் அந்த உடலுக்கும் உயிருக்கும் முழுமையான சுதந்திரம் கிடைக்குது. நீ வளர்த்த அந்த முயலுங்க இப்போ சுதந்திரமான ஆத்மாவாக பறந்துகிட்டிருக்கும். இதை நீ புரிஞ்சிக்கிட்டா இனி இப்படி நீ அழ மாட்ட..." என்றார்.

அழுது கொண்டே இருந்த அவள், "நான் ஆசையா வளர்த்த முயலுங்கள கொன்னுட்டு அதுக்கு ஒரு காரணக் கதை வேற சொல்றியாப்பா" என்றாள்.

பெருமூச்சு விட்ட மாணிக்கம் செய்வது அறியாமல் எழுந்து வெளியே சென்று தேடி அலைந்து அதே போன்று இரண்டு முயல் குட்டிகளை வாங்கி வந்து அவளிடம் கொடுத்தார்.
அதைப் பார்த்து அழுது கொண்டே, "போப்பா அந்த முயல் குட்டிங்க மேல எவ்வளவு பாசமா இருந்தேன் தெரியுமா...? அதுவும் என்கிட்ட எவ்வளவு அன்பா இருந்துச்சு. இதுங்க மேல நான் பாசம் வச்சா நாளைக்கு இதையும் கொன்னிடுவீங்க... அது எங்க இருந்துச்சோ அங்கேயே கொண்டு போய் விட்டுடுப்பா" என்றாள்.

அத்தனையும் அறிந்த மாணிக்கத்திற்கு தனது மகளுக்கான பதிலை கொடுக்க முடியவில்லை. குற்ற உணர்ச்சியில் தலை குனிந்து நின்றார்.

முயல் குட்டிகள் கூண்டில் விளையாடிக் கொண்டே இருந்தன...

# இட்லி கடை

பரிவை சே.குமார்





தமிழ் சினிமா வன்முறை, போதையின்னு தடம் மாறி வருடங்களாகிவிட்ட நிலையில் அவ்வப்போது சில குறிஞ்சிகள் பூப்பதுண்டு. அப்படிப் பூத்த படங்களில் ஒன்றுதான் 'இட்லி கடை', அதாவது இளைஞர்களுக்குப் போதை நல்லதுன்னு சொல்லிக் கொடுக்கும், கெடுக்கும் கலாச்சாரம் இல்லாமல் வந்த படம். 'காந்தாரா' புயலில் காணாமல் போய்விட்டது என்ற பேச்சு இருந்தாலும் 'இட்லி கடை' வெற்றி பெற்ற கடையாகி இருக்கிறது என்பதே உண்மை.

இன்னைக்கு மலையாளம், தெலுங்கு, கன்னட மொழிப் படங்கள் எல்லாம் சிறப்பான கதையம்சம் கொண்ட படங்களை எடுக்க ஆரம்பித்திருக்கின்றன. இரண்டாயிரத்துக்கு முன்பு வரை அருமையான கதைகளைக் கொடுத்த தமிழ்ச்சினிமா, மற்ற மொழிக்காரர்கள் பக்கத்தில் கூட வரமுடியாமல் வைத்திருந்த தமிழ்ச்சினிமா, மெல்லமெல்ல கதைகளை விடுத்து மாஸ் என்னும் சுவற்றை எழுப்பி, கடந்த ஆறேழு வருடமாக கட்டவிழ்த்த போதையையும், கட்டுக்கடங்காத வன்முறையையும் மட்டுமே படமாக்க ஆரம்பித்திருப்பதுடன், இப்படித்தான் படமெடுப்போம் என இயக்குநர்களையும் பேச வைத்திருக்கிறது. 'காந்தாரா' எடுத்த ரிஷப் ஷெட்டி தங்களது கலாச்சாரத்தை, நாட்டுத் தெய்வங்களைப் பற்றி படம் எடுப்பேன் என்கிறார். இங்கோ போதையை இன்னும் எப்படியெல்லாம் படத்தில் காட்டலாம் என யோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

சரி, இட்லி சாப்பிடப் போகலாம் வாங்க.

முதலிலேயே சொல்லிவிடலாம், தனுஷ் இயக்குநராய் ஜெயித்திருக்கிறார். நடிகனாக எப்பவும் போல் நடிப்பில் அசத்தியிருக்கிறார். இரண்டுக்கும் வாழ்த்துகள்... ஆனால் கதைக்களத்தில்...?

அந்தக் கிராமத்தில் இருக்கும் வீடுகளைப் பார்க்கும் போது அது ஒரு குக்கிராமம் என்பதைப் போல்தான் தெரிகிறது. பக்கத்துக் கிராமங்கள் எல்லாம் அந்த ஊருக்கு வர வாய்ப்புண்டு என்றால் ஏதோ ஒரு இட்லி கடை என்பதே பெரிய விசயம் இதுல போட்டியாய் புரோட்டாக்கடை வேறு. கிராமத்துல பிறந்து வளர்ந்தவன் என்பதால் இன்றைய கிராமத்தின் நிலை என்ன என்பதை நன்கு அறிந்திருப்பதால் இதுவே பெரும் அபத்தமாகத் தெரிந்தது.

அன்னைக்கு வீடுகளிலும் கடைகளிலும் ஆட்டுக்கல்லில் மாவட்டினார்கள். பெரும்பாலும் கிராமங்களில் கூட தொன்னூறுகளில் கிரைண்டர் வந்துவிட்டது. ஆட்டுக்கல் மட்டுமல்ல அம்மியும் காட்சிப் பொருளாய் ஆகிப் போய், வீட்டுக்குள் இருந்து மெல்ல வெளியேறியது. இப்போது உள்ள பெரும்பாலான வீடுகளில் ஆட்டுக்கல், அம்மி என எதுவும் இருப்பதில்லை. வீட்டில் இதெல்லாம் இருக்க வேண்டுமென நகரத்துவாசியாகிப் போன கிராமத்து மக்கள் வீடுகளில் வாங்கிப் போட்டிருந்தாலும் உபயோகிக்காமல் வீட்டுக்குப் பின்னேதான் கிடக்கும். அப்படியிருக்க, இந்தக் காலத்திலும் ஒரு கடைக்கான மாவை கல்லில் ஆட்டித்தான் ஆவேன் என்பதெல்லாம் அபத்தத்தின் உச்சம்.




முருகன் (தனுஷ்) படிக்கும் காலத்தில் அவரது அப்பா சிவனேசன் (ராஜ்கிரண்) அப்படி மாவாட்டித்தான் கடை நடத்தினார் என்பது ஏற்புடையதுதான். அதற்காக முதல்நாள் மாவாட்டி எடுத்துக் கொண்டு போய் இட்லி ஊற்றி, வியாபாரம் பார்த்தார் என்பது சரிதான், ஆனால் கையில் கொண்டு போகும் சிறு தூக்குச்சட்டி மாவில் அந்தக் கிராமத்து மனிதர்கள் அதிகம் பேர் - வீடுகளில் சமைக்கமாட்டார்கள் போல - சாப்பிடுவதாய் காட்டுவதும், கடையில் போய் மாவாட்டி உடனே இட்லி ஊற்றுவதும் நகைப்புக்குரியது.

ஆட்டுக்கல்லில் ஆட்டும் மாவில் இட்லி, தோசை, பனியாரம், ஆப்பம் என எது செய்தாலும் பூப்பூவாய், சுவையாய் இருக்கும் என்பது உண்மைதான் ஆனால் முதல்நாள் மாவு ஆட்டி, மறுநாள்தான் இட்லி ஊற்றுவார்களே ஒழிய உடனேயெல்லாம் செய்ய முடியாது. அதுவும் தனுஷ் கடையில்தான் மாவாட்டுகிறார். அவர் ஒருவரே ஒரு மணி நேரம் ஆட்டுவதாய் வேறு காட்டுவார்கள், என்ன கொடுமை இது. ஆட்டுக்கல்லில் மாவாட்டியிருந்தால் தெரியும், சிலர் மட்டுமே ஒரு கையால் மாவைத் தள்ளி விட்டுக் கொண்டு மறு கையால் ஆட்டுவார்கள். மற்றபடி ஒருவர் மாவாட்ட மற்றொருவர் அரிசியைத் தள்ளிக் கொடுக்க வேண்டும். கிரைண்டரில் ஒரு தடுப்பு வைத்து அரிசியை அரைபட குழிக்குள் விழ வைப்பது போல. நானெல்லாம் மாவாட்டியும் இருக்கேன், தள்ளியும் கொடுத்திருக்கிறேன்.

இந்தக் கடையை நாம இன்னும் விரிவாக்கலாம், முருகன் இட்லி கடை போல, மதுரை அம்மன் மெஸ் போல வேற வேற ஊர்களில் ஆரம்பிக்கலாம் எனக் கல்லூரி படித்தபின் அப்பாவிடம் பேசும் போது அவர் பழமை மாறமாட்டேன் எனப் பிடிவாதமாய் நிற்க, கோபித்துக் கொண்டு சென்னை போய் அப்படியே வெளிநாடு போன தனுஷ், அங்கு மிகப் பெரிய பதவியில் இருந்தாலும் ஊரில் அதே ஏழ்மை நிலைதான்... வீட்டையோ, கூரையிலிருக்கும் கடையையோ அவர் புதிதாகக் கட்டிக் கொடுக்கவில்லை. புறம்போக்கு நிலத்தில் கடை இருக்கு என்பதாலும், அந்தக் கடை இப்படியே இருந்தால்தான் இறுதிக்காட்சிக்கு தேவைப்படும் என்பதாலும் அப்படியே விட்டிருக்கலாம்.

வீட்டிற்கு ஒத்தைப் பிள்ளையாய் இருக்கும் நாயகன், வெளிநாடு போன இடத்தில் முதலாளி மகளைக் காதலித்து திருமண ஏற்பாடு பண்ணியபோதும் அப்பா கடையை விட்டு வரமாட்டேன் எனச் சொல்வதாய் அம்மா மூலம் போனில் சொல்லி முடிக்கிறார்கள். ஒத்தப்புள்ளை போன இடத்தில் ஆத்தா, அப்பன் வேண்டாமென கல்யாணம் செய்து கொள்ள எந்தப் பெற்றோர் ஒத்துக் கொள்வார்கள்..? இல்லை பிள்ளைதான் அப்படி நடக்கட்டும் என நினைப்பானா..?

அப்பாவின் இறப்புக்கு வருபவருடன் அவரைக் கண்காணிக்க இளவரசையும் அனுப்புறானுங்க, அந்தாளு ஊருக்கே வராம இருக்கானாம். சரித்தான். கார்ப்பரேட் கம்பெனிக்காரனுங்க மனுசனா இருக்க மாட்டானுங்கதான். ஆனா ஆத்தா, அப்பன் ரெண்டு பேரும் செத்தாலும் சொன்ன தேதியில திருமணத்தை நடத்தியே ஆகணும்ன்னு நிக்கிறதெல்லாம்...? சரி விடுங்க. ஊருக்கு வந்தவன், இட்லிக் கடையை பல இடங்களில் ஆரம்பிக்கணும்ன்னு எண்ணம் வைத்திருந்தவன் அதையெல்லாம் தொலைத்துவிட்டு அப்பாவைப் போல் மாவாட்டுறான். அவர் சொன்ன அகிம்சையைக் கடை பிடித்து அடி வாங்குகிறான். அப்பா, அம்மாவை மாவாட்ட விட்டது போல் தனது சிறுவயதுத் தோழியையும் மாவட்ட வைக்கிறான். சாகும் வரை அப்பா செய்ததை தானும் செய்து நம்மைச் சாவடிக்கிறான்.

சமுத்திரக்கனி புரோட்டாக்கடை வைத்திருக்கிறார். கிராமத்துல காலையிலயே புரோட்டாக்கடையில கூட்டம் கூடி நிக்கிறதெல்லாம்... சினிமாவில் மட்டுமே நடக்கும். இந்தாளு நித்யா மேனனை கட்டிக்க ஆசைப்பட்டு, தனுஷை ஊரை விட்டு வெளியேற்ற வேண்டும் என நினைத்து வில்லத்தனம் செய்கிறார். அதுக்காக கன்னுக்குட்டியை வெட்டப் போகும் கொடூர மனமெல்லாம் கிராமத்தானுங்களுக்கு இருக்கவே இருக்காது, ஏன்னா அவன் பொறந்தது முதல் அதுககூடத்தான் வாழ்வான். என்ன போதையில் செய்ய வந்துட்டான்னு காட்ட, சரக்கு ஊத்திவிட்டுட்டானுங்க. நம்ம ஊர்லதான் இப்ப சரக்கு அடிப்பவர்களுக்கு தனி மரியாதையாச்சே. கனி தன்னோட கதாபாத்திரத்தை, அறிவுரை சொல்றேன் பேர்வழியின்னு இல்லாம மிகச் சரியாகவே பண்ணியிருக்கிறார். அதேபோல் பார்த்திபன்... இந்தாளு எதுக்குடா இதுலன்னு நாம நினைக்கும் போதே நல்ல காரியத்தைச் செய்து தன்னோட கதாபாத்திரத்துக்கு உயிர் கொடுத்திருக்கிறார். சத்தியராஜ் வந்து போகிறார், பெரிதாக ஈர்க்கவில்லை.

வெளிநாட்டுப் பெண்ணைக் காதலித்து கல்யாணம் வரை போனவர், ஊருக்கு இட்லி விற்க வந்ததும் நித்யா மேனனை லவ்வுறார். அந்தம்மாவும் நான் இப்புடியே இட்லி அவிச்சே வாழ்க்கையை ஓட்டிக்கிறேன்னு ஒட்டிக்கிருது. தனுஷ் வீட்டில் இருந்து மகளை இழுத்துக் கொண்டு போகும் அம்மாக்காரி பாதி தூரத்தில் மகளின் கையை விடுவிக்கும் இடமும் இயக்குநர் டச், அதேபோல் கன்றுக்குட்டிக்கும் நாயகனுக்கும் ஏற்படும் உறவு, குலதெய்வ வழிபாடு என கிராமத்தைக் கண் முன்னே நிறுத்தியிருக்கிறார் இயக்குநர் தனுஷ்.

ராஜ்கிரணால்தான் தனது பெற்ற அப்பாவுக்கு வாழ்க்கை துவங்கியது என்பதால் அவர் மீது தனுஷ்க்கு மிகப்பெரும் மரியாதை. இதுவரை தனது மூன்று படங்களில் அவருக்கு வாய்ப்புக் கொடுத்து இருக்கிறார். எல்லாமே சிறப்பு என்றாலும் இந்தப் படத்தில் முதிர்ந்த நடிப்பு. அருமையாக நடித்திருக்கிறார். அவர் இறந்து போனாலும் இறுதிவரை ஆங்காங்கே அவரைக் காட்டி படம் முழுவதும் காட்டியிருப்பது சிறப்பு. அம்மாவாக நடித்த கீதா கைலாசமும் சிறப்பாக நடித்திருக்கிறார்.



வில்லத்தனத்துக்கு அருண் விஜய், சில இடங்களில் எதுக்கு இவன் இப்புடி பண்ணுறான் எனத் தோன்றினாலும் தனது கதாபாத்திரத்தைச் சரியாகச் செய்திருக்கிறார். இளவரசு குடும்பத்தை ஒருமுறை பார்த்தாலும் படம் முழுவதும் தனுஷுடன் இருந்து சிறப்புச் செய்கிறார்.

வெளிநாட்டுக் காதலியாக வரும் ஷாலினி பாண்டே ஆங்கிலம் அதிகம் பேசுவதுடன், நாமள்லாம் வில்லன்களாப்பா எனக் கேட்பதுடன் தனுஷுக்காக அண்ணனுடன் மோதி வெற்றியும் பெறுகிறார். ஆனால் பணத்தைக் காட்டி அவரால் காதலில் வெற்றி பெற முடியவில்லை. நித்யா மேனன் மாவாட்டிக் கொடுத்து வெற்றி பெற்று விடுகிறார். புரோட்டாக்கடையில் பரிமாறிக் கொண்டிருந்த நித்யா மேனன் இதில் இட்லி விற்கிறார். அது எந்தக் கடைக்காரனைக் கட்டப் போறாரோ தெரியலை என்றாலும் கதாபாத்திரமாக வாழ்ந்து விடுகிறார். திருச்சிற்றம்பலம் போல் இல்லை என்றாலும் சிறப்பாகவே நடித்திருக்கிறார்.

இசையில் கலக்கியிருக்கிறார் ஜி.வி.பிரகாஷ். இவர் நடிப்பதை விடுத்து இசையமைக்கலாம், நாமும் அனிருத் போன்ற பாத்திரங்கள் உருட்டிகளிடமிருந்து கொஞ்சமேனும் தப்பித்து 'உருகுதே... மருகுதே...' போன்ற பாடல்களைக் கேட்டு ரசிக்கலாம். இட்லி கடை பாடல்கள் அனைத்தும் அருமை. பின்னணி இசையும் சிறப்பு.

இது எனது சின்ன வயதில் எங்கள் கிராமத்தில் பார்த்த கதைதான் என தனுஷ் ஆரம்பத்திலேயே சொல்லிவிடுகிறார் என்றாலும் எண்பது தொன்னூறு கதைக்களம் எனச் சொல்லியிருந்தால் கூட பரவாயில்லை, இன்றைய காலத்தில் பெரிய வேலையை விட்டுவிட்டு பத்துக்கும் இருபதுக்கும் இட்லி கடை வைத்துக் கொண்டு இருப்பது போல் காட்டியிருப்பதுடன், முன்னேறிச் செல்லுங்கள் எனச் சொல்வதை விட்டுவிட்டு குடும்பத் தொழிலைப் பார்த்தால் போதும் என்று சொல்வதும், இரண்டு பெண்களை மாவாட்ட மட்டுமே பயன்படுத்தி இருப்பதும் பிற்போக்குத்தனத்தின் உச்சம்.

இந்தப் படத்துக்கு பள்ளிக்கூடப் பசங்களைக் கூட்டிக் கொண்டு போய் காட்டியதெல்லாம் எதற்காக..? இதில் என்ன வாழ்வியல் முன்னேற்றத்தைச் சொல்லியிருக்காங்கன்னு பசங்களுக்குப் பாடம் எடுத்தாங்க..? இதுல வேற காந்தி படத்தை பள்ளிகளில் காட்டியது போல் இதையும் காட்ட வேண்டுமாம்..? எதுக்காக..? படிச்சிட்டு பாரின் போய் சம்பாரிப்பதைவிட அப்பன் பார்த்த வேலையை எந்த முன்னேற்றமும் இல்லாம நீயும் பாரு, நாளைக்கு உன் பிள்ளையையும் அதையே பார்க்க வையின்னு சொல்ல ஒரு படம், இதை மாணவர்களுக்கு காட்டியே ஆகணும்ன்னு சொல்ல இங்கே அரசியல்வாதிகள். சரித்தான்.

அபத்தமான படம் என்றாலும் மேலே சொன்ன போதையும் வன்முறையும் இல்லாத படம் கொடுத்த தனுஷ்க்கு வாழ்த்துகள். இட்லி கடையை அவரின் கனவைப் போல் விரிவாக்கியிருந்தால் அதீத சுவையாக மாறியிருக்கும்.

GALAXY BOOK
SELLERS & PUBLISHERS

# புதிய புத்தகம்,
# புதிய சிந்தனை



**_MORE THAN JUST A BOOK SHOP_**

புத்தகங்கள் வாங்க கேலக்ஸி வாட்ஸாப் எண்ணில் தொடர்பு கொள்ளவும்.
+91 99944 34432